பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| அரை சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஸ்ரீ கார்த்திகைமீ 3௳ (18—11—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 30

நிமிஷக்கணக்கில் குணம் அடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சரியநிவர்த்தி!!

## சுவாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமால் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0.

பு. மா. சொக்கலிங்க முதலியார், புரோப்ரைட்டர்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை, செவ்வாய்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

Use Only Unbreakable
Wrought Iron Railings Noted for.




100 வருஷத்துக்கு உத்திரவாதம்-

நம்நாட்டு கைத்தொழிலை ஆதரியுங்கள்.
இரும்பு கிராதிகள் விலை மலிவு.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்து யிருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாகரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாமலும் தயார்செய்து ஏராளமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு ஏற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும்- பிரைஸ் லிஸ்ட் இனாம்-

தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

## போட்டோ ஆல்பம்.



நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

சந்தாதாரர்களுக்கு

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்.
மைலாப்பூர், மதராஸ்

## 'திராவிடன்'

### தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | „ 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | „ 18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

## பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கும், இன்னும்இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கபடுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் மிகவும் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பால் டியன் ஸ்டூடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைச் செடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபின் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பபடும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முத்துக்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினைன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்டார்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

## 'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

# அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி, இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

## திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்



# கை தையல் மிஷின்.

இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம், மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம், நவராத்திரிக்காகப் பெரிய பொம்மைகளுக்கு நன்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மெஷின் ஐம்பதுவருஷமானாலும் கெடாது.

விலை ரூபாய் 4—15—0 தபால் செலவு இனாம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.
தபால் பெட்டி 119, மதருஸ்.

## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை „ 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஜீவ ரக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S I. R.

# பண்டிதர்களுக்குப் பகை அவர்கள் படிப்பேயன்றி "குடி அரசு" அல்ல.

கைவல்ய சாமியார் எழுதுவது.

ஆராய்ச்சியிலும் தியானத்திலும்படிப்பிலும்ஈடுபட்டிருக்கும் எங்கள் பண்டிதர்களே! 'குடி அரசு' சமயத்தையும் அதிலுள்ள பெரியவர்களையும் குற்றம் சொல்லுகிறதென்று கோபித்தாலும், அதிலுள்ளதையும் ஆலோசித்துப் பாருங்கள். நாஸ்திகவாதமென்பது இன்னதென்று தெரியாததற்கு முன்னே அதைத் தள்ளிவிடாதீர்கள். பஞ்ச பூதமான உலகத்தைத் தர்க்கித்து, அணுப்பிரயாணமென்று சொன்னதார்க்கீக மதம் நமது கடவுளைச் சொல்லவில்லை. அந்த தார்க்கீக மதமே எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரமாயிருக்கிறது- அந்த அஸ்திவாரத்திலிருந்தே எல்லாமதங்களுக்கும் மேற்கோப்பு ஜோடித்தார்கள் என்பதுபோல "குடி அரசு" உங்களுடைய சமய அஸ்திவாரத்தை நிலைநிறுத்தி அதிலுள்ள ஆபாசங்களையும் உங்களுடைய எதார்த்த பலனற்றகொள்கைகளையும் போக்கி, நீங்கள் வைத்திருக்கும் தனிக் கடவுள் உங்களையும் எங்களையும் உலகப் பொதுவாகிய கடவுளின் ராஜ்யத்துக்குள் புகவொட்டாமல் தடுப்பதை உங்களுக்குக் காட்டினால், நீங்கள் "குடி அரசோடு" கலந்து வடிவுகொண்டு நமது தேசத்தில் பசித்திருப்போருக்கு உணவும் நீர் வேட்கை கொண்டோருக்கு ஜலமும் உதவுவீர்களென்று 'குடி அரசு' நம்புகிறது.

"நன்மை தீமை எனவும், நித்தியம் அநித்தியம் எனவும் இரண்டு. அதில் அநியமான உலகமும் அதன் போகங்களும் அழிந்து போகக்கூடியது. நன்மை தரக்கூடிய நித்தியமான கடவுளின் பரமபதம் அழியாதது. அதையே அடைய எப்பொழுதும் ஈஸ்வரஸ்தோத்திரமும் அவர் கைங்கரியமுமே செய்வோம்" என்று சொல்லுவது வாய்க்கு அழகும், வரிசைக்கு ஒழுங்குமாக விருக்கலாம், வங்க விருந்துக்கும் வாழ்க்கையில்லத்திற்கும், அதில் வந்துவிட்ட குழந்தைக்கும், அதன் வாழ்வின் போக போக்கியங்களுக்கும் வரப் போகும் பரமபதக் காசு செல்லாதே- கடவுள்பக்தியெனச் சொல்லும்ஆசார அனுஷ்டானங்களிலும் பண்டிதத்திறமையிலும், போகமும்கர்மமும் விடப்படாமையிலிருக்கையில், கர்மம், செய்கை எல்லாவற்றுக்கும் அப்பாலும்சுகம் துக்கம்எல்லாவற்றுக்கும் அப்பாலும் உள்ளதன்றோ சாத்வீக அவஸ்தை- பணக்காரன் வீட்டுப்பிள்ளை மந்தமாக விருப்பதைப்பார்த்து 'என்ன சாத்வீகமய்யாகுழந்தை!' என்று சொன்னாலும் அது புத்திக்கு உபயோகப்படுமா? சமயக்குறிகள் சில அணிந்து அதன் பதிகங்களை பாராயணம் பண்ணி 'அரகரா! மகாதேவா! சம்போ! சங்கரா! வைகுண்டவாசா! பஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!" என்பதினால் சாத்வீகத் தன்மை வந்து விடுமா? வந்து விடுமாயின் விபூதிச் சண்டையும் நாமச்சண்டையும், வேதம், ஆகமம் ஓதுவது முன்பு பின்பு என்கிற தர்க்கமும் ஏன் வரவேண்டும்? இந்த விதை விதைத்துப் போனவர்கள் உங்களை விடப் படித்தவர்களும் சமய ஒழுக்கமுடையவர்களும் கடவுள் பக்தியுடையவர்களும் என்று நீங்கள் ஒத்துக்கொண்டது தானே- இதை நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களேயானால், நாம் சலனமற்று உயிரற்று ஒடுங்கி எச்செய்கை செய்யவும சக்தியில்லாமல் மிக மிகத்தாழ்ந்து தாமசிக அவஸ்தையில் இருந்து கொண்டு எவருக்கும் தெரியாமல்உள்ளுக்குள்ளேயே அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருக்கிறோம். என்பது உங்களில் சிலருக்குத் தெரிந்தாலும் தெரிந்தவர்களும் தெரியாத அநேகரோடு கூடி உங்களுக்கும் நாட்டிற்கும் பலனொன்றுமில்லாமல் போகிறீர்களே என்று தான் "குடி அரசு" கவலைப்படுகிறது.

சிதம்பரத்து சைவப் பண்டிதர் "குடி அரசை" அதிகம் கோபிக்கிறார்கள். அதில் ஒரு தமிழ்ப் பண்டிதன் நாங்கள் அப்பனுக்குப் பிறக்கவில்லை என்றும் அதை ரூபிக்க ஒரு கதையும் தன் மாணாக்கர்களுக்குச் சொன்னாராம். அந்தக்கதை வருமாறு:—

"ஒரு ராஜா வேட்டைக்குப் போனான்- அங்கே அவனை ஒரு ரிஷிபத்தினி கண்டு மோகித்து ராஜனை விரும்பினாள்- ராஜா உடன்படவில்லை. ரிஷி பத்தினி ராஜாவை சபித்து விட்டாள். அநேக நாளாக அவளை மோகித்துக் கொண்டிருந்த தேவேந்திரன் உடனே அந்த ராஜாவின் ரூபத்தோடு வந்து ரிஷிபத்தினியைக்கூடித் துருவன் என்பவனைப் பெற்றான்- அந்த துருவன் வேதங்களையும்வேள்விகளையும்நிந்தித்துக் கொண்டிருந்தமையால் அப்பொழுதுள்ள பிராமணர்கள் அவனைத் தன் தகப்பனுக்குப் பிறந்தவனல்லன்" என்று தீர்மானம் பண்ணினார்களாம்.

இந்த ஆதாரத்தைக்கொண்டு துருவனைப்போல நாங்களும்அப்பனுக்கு பிறக்காதவர்களென்றுரூபித்தாராம். இதுதானுபண்டிதத்திறமையிலும்சைவசமயப்பற்றுதலிலும்தெரிந்துகொண்டது? பண்டிதர்கள் விவேகமற்றகோபத்தால் முன்ஆலோசனையில்லாமல் சாஸ்திரம் பேசுகிறார்கள். அதனால் அவர்களின் புத்தி பொது அறிவில் சிறுமைப்படுவதை அவர்கள் உணரவில்லை- அவர்கள்மாணாக்கர்களிடம் வியாபக அறிவுடையவர்கள் என்று காட்டிக் கொள்ள முயற்சி செய்யவுமில்லை.

உண்மையான சிவபக்தியுடையவர்களின்மனம் வருத்தப்படுமே என்று நான் நினைப்பதால் பதில் சுருங்குகிறதே ஒழிய பண்டிதர்களின் படிப்பைப் பற்றின கவலையாலன்று. "பண்டிதர்கள் உங்களைக் குற்றம் சொன்னால் நீங்கள் அவர்களுக்குச் சொல்லும் பதிலில் சிவபக்தர்களுக்கு என்ன சம்பந்தம்? அதனால் எப்படி எங்களுக்கு வருத்தம் வரும்?" என்று கேட்கலாம். பண்டிதன் சைவத்தமிழன்- எங்களுக்கு அப்பனில்லை என்று சொல்லுவதற்கு சமயக்கதையை ஆதாரம் காட்டினான்- ஆனதால் நாங்கள் சிவபெருமான் கற்பழித்த ரிஷிபத்தினிகளை நீக்கி பாக்கி ரிஷிபத்தினிகளையெல்லாம் கற்பழிக்க தெய்வலோகத்தில்தேவேந்திரனை சிவபெருமான் வைத்துக் கொண்டிருந்தும் அதுவும் போதாமல் பார்வதியின் குரங்கைக் கண்டு மோகித்து அங்கோரு பிள்ளை பெற்று அதுவும் போதாமல் பன்றியை மோகித்துபன்றியாகி அங்கு சென்று அதுவே சொர்க்கமாகி தங்கு வாழ்ந்திருக்கையில் சிவபெருமான் தேவர்களை அனுப்பி தேவேந்திரனைக் கூட்டக் கொண்டு வந்த கதைகளையெல்லாம் சொன்னால் சைவர்களுக்குக் கோபம் வாராதா?

பண்டிதர், துருவன் கதையை எங்களுக்கு உபமானம் காட்ட சைவசமயம் இடம் தராது- துருவனைப்போன்ற கதைகளெல்லாம் ஸ்மிருதியை ஆதாரமாகக் கொண்டவர்கள் ஏற்படுத்தினவை- இரக்ஷண்ய சேனைக்காரர்கள் நம் தேச உடை உடுத்தி அவர்களுடைய மதப்பிரசாரம் செய்வதுபோல, சிவ வேஷம் தரித்து சிவக்கடவுளை முன்னால் காட்டி சுமார்த்தப் பிரசாரம் செய்யும் தீக்ஷதர்களுக்கு, சைவனுக்குவாலும்சுமார்த்தனுக்குதலையும் காட்டும் சிதம்பரத்தில் வாழும் இந்தத்தமிழ்ப் பண்டிதனுக்குதுருவன்கதை உபமானம் கிடைப்பது கஷ்டமில்லை- அந்த துருவன் எல்லா பிராமணனையும் பண்டிதனையும் வென்று மரியாதையும் அவர்களாலேயே வென்றான் என்கிற அவன் கதை முழுதும் பண்டிதர் படித்திருந்தால் துருவன் கதையைப்பிரமாணமாக கூறமாட்டார். ஏன் "குடி அரசி"லுள்ள கோபம், துருவன் கதையின் உபமானப்படி பார்த்தால் எங்கள் அப்பனைப் போலவே சைவப் பண்டிதனுக்கெல்லாமிருக்க வேண்டும். எப்படியெனில், சைவன்வேதத்தை ஒத்துக்கொள்ள மாட்டான். யாகமும், ஆடு மாடு கொலையும், கள்ளு குடிப்பதும், சைவர்கள் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். சைவர்களுக்குத் தெரியாமல் ஒரு மூலையில் அவர்கள் புஸ்தகங்களில் ஒட்டிக் கொண்டிருந்தாலும் அதற்கு சைவர்கள் ஜவாப்தாரியல்ல. ஆட்டு அண்டம் சிரார்த்தத்தில் படைத்தால் தான் பிதிர்த்தேவதை தேவேந்திரனுடைய அருப்புண்ட அண்டத்திற்கு கடன் கொடுக்க ஏற்பட்ட பிதிர் தேவதையின் உலகமும் சைவர்களின் பிதிர் தேவதையின் உலகமும் ஒன்றோ இரண்டோ என்பது நமக்குத் தெரியாவிட்டாலும் துருவன் கதை சிதம்பரத்து சைவப் பண்டிதனுக்கு உபமானமானால் இரண்டும் ஒன்றாகவிருந்தாலும் விருக்கலாம். சைவ சித்தாந்தத்தை நிலைநிறுத்தின பண்டிதர்களெல்லாம் பாப்பான் மதத்தைக் கண்டித்திருப்பதாகவே இப்பொழுதிருக்கும் பண்டிதர்களும் சொல்லுகிறார்கள். ஸ்மிருதியாகம்முதலியவைகளை ஒத்துக்கொள்ளாதவனுக்கெல்லாம் துருவன் கதை உபமானம் தானே? தங்களுக்கு விரோதமாக உபமானம் கூறும் பண்டிதர்கள் படிப்பு வியாபகப்படவேண்டும். இல்லையேல் அவர்கள் படிப்பே அவர்களுக்குப்பகை.

பாத்துவத்தில் சுக்கிலந்தான் தகப்பன். எந்தத் தகப்பனுக்காகவிருந்தாலும் பீஜத்தின் யோக்கியதையே உயர்வுடையது. அதனால் தான் "ரிஷிமூலம் கேட்காதே" என்றது. மதப் பெரியவர்களும் பண்டிதப் பெரியவர்களும், நம் கடவுளில் சில கடவுளும் தாலிகட்டின அப்பனுக்குப் பிறக்கவில்லை. அவர்களையெல்லாம் நாம் வணங்காமலா இருக்கிறோம்? நமது முருகக் கடவுளின் மாமிக்குத் தாலிகட்டினது மான் என்று கந்தபுராணத்தைக் காட்டியும் ஆக வேண்டியிருக்கிறது. கல்யாணம் செய்யும்போது பெண்ணின் வயிற்றிலிருக்கும் பிள்ளையும், கல்யாணத்திற்கு முன் இன்னொருவனால் பிறந்தபிள்ளையும், கல்யாணம் ஆன பின் மற்றொருவனால் பிறந்த பிள்ளையும் நாம் போற்றும் ஐந்தாம் வேதத்தில் ஒத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. வில்லுக்கு விஜயன் சொல்லுக்கு அரிச்சந்திரன், கொடைக்குகர்ணன், தருமத்திற்கு தருமன், சாஸ்திரத்திற்கு சகாதேவன், எனப்படுபவர்களுக்கு அப்பனுண்டா? துருவனைப்போன்ற அப்பன் தானே- அவர்கள் பேரை உபமானம் காட்டித்தானே பண்டிதர்கள் முன்னே பிழைத்தார்கள். இப்பொழுதும் பிழைக்கிறார்கள், இனியும்பிழைக்கத்தீர்மானம் செய்கிறார்கள்,

சூரியனுக்கு ஒரு பெண்ணையும் சந்திரனுக்கு ஒரு பெண்ணையும் தாலி கட்டி அந்த வம்சம் இரண்டும் பிரபல்யமாய் பரத கண்டத்தை ஆண்டு அதில் சிலர் நமக்கு தெய்வங்களாகவுமிருக்கிறார்களே- சூரியனும் சந்திரனுமா பிள்ளை பெற்றது? அந்தக் கதைகளில்லா விட்டால் பண்டிதன் பிழைப்பதெப்படி? நம் நாடு பாழடையாமலிருப்பதெப்படி? எங்கள் தாய்மார்களுக்குத் தாலிகட்டினவர்களுக்கு பிறந்தேமா இல்லையா யென்பது எங்களுக்குத் தெரியாது. எங்களைப் போலவே அநேகருக்கு இந்த ரகசியம் தெரியாது- நமது திவ்விய க்ஷேத்திரவாசிக்குத்தான் இதன் உண்மை தெரியமார்க்க முண்டு- போதாக்குறைக்கு கடவுள் உதவியும்கிடைக்கும்- எது எப்படி இருந்தாலும் துருவன் அடைந்த சிறப்பைப்போல எல்லாரும் ஒத்துக் கொள்ளும்படியான நியாயங்களால் "குடி அரசு"ம் அதன் சுயமரியாதை சங்கங்களும் பொது ஜனங்களின் உதவியைப் பெற்று விடுமென்பது நிச்சயம்-

(இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# இந்துக்கோவில்களும் கடவுள் தன்மையும்.

## ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதரசுவாமிகள் எழுதுவது

கோவில்கள் என்பவைகளை. கடவுளை வணங்கும் ஸ்தலங்களென்று சொல்லுகிறார்கள். எல்லா மதங்களிலும் கடவுளை வணங்குதற்கென தனி யிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் ஒவ்வொருவரும் ஆங்கு சென்று கடவுளை வழிபடுகின்றனர். கடவுள் சன்னிதியில் அவர்கள் சமத்துவமாயிருக்கின்றனர். ஆங்கு மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், நல்லொழுக்கங்களுக்கும் ஆன முறைகள் போதிக்கப்படுகின்றன. தெரிந்த பாஷைகளில் பிரார்த்தனைகளும், தியான மந்திரங்களும் உச்சரிக்கப்படுகின்றன. கடவுள் ஒருவர்தானென்று அம்மதங்கள் கூறும். உதாரணமாமக.— கிறிஸ்துவர்கள் யேசுவையும், முகம்மதியர்கள் மகமத் நபியையும் முறையே கிறிஸ்தவ, இஸ்லாம் மதஸ்தாபகர்களாகவும் போதகர்களாகவும் வணங்குகின்றனர். கடவுளை வணங்க அம்மதத்திலுள்ள எல்லா மக்கட்கும் சம உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றது. கடவுளை வணங்க அம்மதத்தினர்களுக்கு எவ்வித பணச்செலவும் இல்லை. பரிசுத்தமான உள்ளமும், உண்மை பக்தியும்தான் வேண்டுமென்பது அவர்கள் கருத்து. ஆடம்பரமற்ற நிலையில், அமைதியுடன் இருந்து தூய எண்ணங்களால் அவர்கள் இறைவனை வழிபடுகின்றனர்.

இந்து மதத்திலோ எண்ணிறந்த கடவுள்களிருக்கின்றன. இந்த கடவுள்களுக்காக ஊர்தோறும் எண்ணற்ற கோவில்களும் உண்டு. கடவுள்களுக்கு இருக்க இடம் போதாதென்று இப்பொழுதும் புதுப்புதுக் கோவில்கள் கட்டப்படுகின்றன. சிவன், விஷ்ணு, விக்னேஸ்வரன், சுப்பிரமணியன், மாரியம்மன், காளியம்மன், கருப்பண்ணன், பொம்மன், திம்மன் என்று என்னென்னமோ பேர்களைக்கொண்ட கடவுள்கள் ஆங்கு பிரதிஷ்டிக்கப்படுகின்றன. மூன்று தலைகளும் நான்கு கைகளும், ஐந்து தலைகளும் பத்து கைகளும், ஆறு தலைகளும் பன்னிரண்டு கைகளும், யானை முகங்களும் பன்றி முகங்களும் இக்கடவுள்களுக்கு உண்டு. கல்லினாலும் செம்பினாலும், சிலவிடங்களில் மாக்கட்டைகளினாலும், மண்ணினாலும் இக்கடவுள்கள் செய்யப்படுகின்றன. இந்த கடவுள்களுக்கு மனைவிமார்களும், மாமன் மைத்துனர்களும், விசேஷமாக தாசிகளும் ஏற்பட்டிருக்கின்றன. யானையும் குதிரையும் கருடனும், மாடும், பெருச்சாளியும் இக்கடவுள்கள் சவாரிசெய்யும் வாகனங்களாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான மான்யங்களும் உண்டு. ஆனால் இந்தக் கடவுள்களுக்கு சக்தியோ உயிரோ கிடையாது. பார்ப்பனர்கள் ஏதோ முணுமுணுவென்ற சில சொற்களை உச்சரித்து கடவுள்களை அங்குவரவழைப்பதாக சொல்லப்படுகிறார்கள். கும்பாபிஷேகங்களும் நடைபெறுகின்றன. அர்ச்சனைகளுக்கும் அபிஷேகங்களுக்கும் குறைவில்லை. மூன்று காலம் ஆறு காலம் பூசைகளும் நடைபெறுகின்றன. சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும் இல்லாமலில்லை. வாத்தியகோஷங்கள் செவிடுபட ஒலிக்கின்றன. தாசிகளின் நர்த்தனங்கள் காமிகளின் கண்களைக் கவருகின்றன. தேர் திருவிழாக்காலங்களில் சுவாமி ஊர்வலம் வருவதும், வாணங்களும், வேட்டுகளும், இலவரிசைகளும், சில பெண்களின் சைகைகளும் ஆயிரக்கணக்கான மக்களை ஒரு நிமிஷத்தில் மூடர்களாகச்செய்யும் சக்தியைத் தவிர வேறு சக்தி அங்கேயில்லை. இவ்வண்ணம் கடவுள் வணக்கம் முடிவடைகிறது.

இந்த லக்ஷணத்தில், கோவில்களில் உள்ள கடவுள்களை வணங்க இந்துமதத்தை நம்பியிருப்பவர்கள் பலபேர் உள்ளே போகமுடியாது. அவர்கள் கடவுளை ஆராதிக்கவோ, தம் குறைகளை அவரிடம்முறையிடவோ அனுமதிக்கப்படவில்லை பார்ப்பனன் 'உயிர்கொடுத்த' கடவுளுக்கருகில் பார்ப்பனன்தான் போகமுடியும். பார்ப்பனன்தான் கடவுளுக்கும் மக்களுக்கும் மத்தியில் தரகுவேலை பார்ப்பவன். இந்து மதத்தை நம்பியிருப்பவர்களிற்பலர் இந்தக்கடவுள்களைப் பார்க்கவும்கூடாது. சிலர்கோவில்பக்கத்தில் வரக்கூடாது. சிலர், கோவிலுக்குள் நுழையக்கூடாது சிலர், இந்தக்கடவுள்களுக்கருகில் போகமுடியாது. ஆனால் கடவுளிடம் மோக்ஷத்தை வாங்கித்தருகிறேனென்று ஏமாற்றி ஏழைமக்களிடம் காணிக்கையாக பணத்தை கொள்ளையடிப்பதில்மட்டும் இப் பார்ப்பனர்கள் பின்வாங்கினவர்களல்ல. இதென்ன அக்கிரமம்! மக்கள் மோக்ஷமடைய இறைவனை வழிபட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதற்காகவே கோவில்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்கிறார்கள் ஆனால் கோவிலுக்குள்சென்று இறைவனை நேராக வணங்க அனுமதிக்கவில்லையே? யாராவது சென்றுவிட்டால் இந்தக்கடவுள்கள் ஓட்டம் பிடித்து விடுகின்றனவே? கடவுள் அருகில்போய் விட்டால் இக்கடவுள்கள் செத்துப்போய்விடுகின்றனவோ! (உயிர் இருந்தாலல்லவோ சாகும்) ஏழைமக்களின் பணத்தை மட்டும் கணக்கில்லாமல் வாங்கித்தின்றாலும், மக்கள் கோவிலுக்குள் நுழைந்தால், தொட்டால், பூசித்தால், ஓட்டம் பிடிப்பதும் நன்றிகெட்ட இந்தக்கடவுள்களுக்கு வழக்கமாய் போய்விட்டது இதுதான் கடவுளின் தன்மைபோலும்.

இத்தகைய கடவுள்களுக்கு கருப்பஞ்சாறு, இளநீர், பால், தேன் முதலானவைகளால் அபிஷேகம் செய்துசெய்து நம் கடவுள்களுக்கு ஜலதோஷம் பிடித்துவிட்டது. சக்கரைப்பொங்கலும் புளியோதரையும் சாப்பிட்டு சாப்பிட்டு கடவுள்களுக்கு அஜீரணரோகம் தோன்றி யிருக்கிறது. இனி வேறுவழி கிடையாது. டாக்டர்களைக்கொண்டு சிகிச்சை செய்யவேண்டியகாலம் வந்துவிட்டது. எத்தனையோ டாக்டர்கள் மருந்துகொடுக்க விரும்புகிறார்கள். என்ன மருந்துகொடுத்தாலும் இந்தக்கடவுள்கள் இனிமேல்பிழைப்பதரிதென மரணத்தருவாயாக்கூறுகின்றது என்செய்வது! ஆனால்இக்கடவுளின் குடும்ப வைத்தியர்களாகிய பார்ப்பனர்கள்மாத்திரம் தங்கள் வருவாய் போய் விடுமேயென்றுபயந்து 'இன்னும் சாகவில்லை' யென்றே ஏமாற்றுகிறார்கள்.

இத்தகைய கோவில்களாலும் கடவுள்களாலும் மக்களென்னபிரயோஜனத்தை அடைந்தார்கள்? அடையப்போகும் நன்மைதானென்ன? இந்தக் கோவில்களுக்கும் கடவுள்களுக்குமாகபல லக்ஷக்கணக்கான பணத்தை விரயம்செய்திருக்கிறார்களே, செய்தும் வருகிறார்களே? இதனால் பார்ப்பனர்கள் கஷ்டமின்றிப்பிழைக்கின்றார்களே யன்றி மற்ற யாருக்காவது ஏதாவது நன்மையுண்டு என்று யாராவது கூறமுடியுமா!

மோக்ஷமடைவதற்கென்று ஏற்பட்டுள்ள கோவில்களாலும் கடவுள்களாலும் மக்கள் அடிமைப்பட்டு சுயமரியாதை யறுகிடைக்கின்றனர். வேறு எந்தமதத்திலாவது நாட்டிலாவது இத்தகைய கடவுள்கள் இருக்கின்றனவா? கடவுள் பேராலும் மோக்ஷத்தின் பேராலும் மக்களை அடிமைப்படுத்தி சிலர்பிழைக்கின்றார்கள். மோக்ஷமென்பது விடுதலை பெறுவதாகும். விடுதலைபெற சித்த சுத்தியும் சமதிருஷ்டியும் ஞானமும் தான்வேண்டற்பாலது. விடுதலைக்கென ஏற்பட்டுள்ள கோவில்கள் மக்கள் விடுதலைக்கு முட்டுக்கட்டைகளாயிருக்கின்றன. மக்களின் பணத்தையும் நாசம் செய்து அறிவையும் சூன்யமாக்கி அடிமைத் தன்மையை வளர்க்க ஏதுவாயுள்ள இத்தகைய கோவில்களும் கடவுள்களும் இருப்பதைவிட இல்லாமலிருப்பது மேலாகும்; இவ்வண்ணம் கூறுவதால் சிலர் கோபித்துக்கொள்ளக்கூடும். நாஸ்திகப் பட்டமும் வந்துவிடலாம். ஆனால் இத்தகைய கோவில்களையும் கடவுள்களையும் நம்பி ஆஸ்திகசிகாமணியாயிருப்பதைவிட நாஸ்திகனாயிருப்பது மேலல்லவா?

## சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு,

### திரு. நாயக்கர் தலைமை வகிப்பார்.

தென்னிந்திய சமுதாய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு இம்மாதம் 26, 27ந் தேதிகளில் சென்னையில் நடைபெறப்போகின்றது. இம்மகாநாட்டுக்கு வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. இராமசாமிநாயக்கர் அவர்கள் தலைமை வகிப்பார்கள்; தேவி கமலாட்சி பண்டார்லே அம்மையார் அவர்கள் சீர்திருத்தக்கொடியை ஏற்றுவார்கள்; செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் ராவ்பகதூர் எம். கே. ரெட்டியாரவர்கள் மகாநாட்டின்வரவேற்புக் கழகத் தலைவராக இருப்பர்; சென்னை அரசாங்க இரண்டாம் மந்திரி திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள். சாதிச் சண்டைகளும், மதச்சண்டைகளும், நான் பெரியவன் நீ பெரியவன் என்ற வயிற்றுப் பிழைப்புச் சண்டைகளும் தலைவிரித்தாடும் இத்தென்னிந்தியாவில் சமுதாய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடொன்று மிக அவசியம் என்றே நாம் சொல்வோம். சமுதாய சீர்திருத்தக்காரர்களெல்லாம் ஒன்றுகூடி எந்த வகையில் இந்நாட்டிலுள்ள சாதிச்சண்டைகளையும், மதச்சண்டைகளையும், ஒழித்துச் சமத்துவம், சகோதரத்துவம் நிலைநாட்ட முடியுமென்பதைப்பற்றி ஒரு திட்டம் வகுத்து அத்திட்டப்படி வேலைசெய்யவேண்டும். சாதிவேற்றுமைகளும் மதவேற்றுமைகளும் மூடப்பழக்க வழக்கங்களும் புராணப் புரட்டுகள், மதப்புரட்டுகள், வேதப்புரட்டுகள் முதலியவைகளும் இருக்கின்றமட்டும் இந்தியா விடுதலை பெறமுடியாது. சாதி வித்தியாசங்களுக்கும் தீண்டாமைப் பேய்களுக்கும் இடம் கொடுத்துக்கொண்டு சுயராஜ்யம் சுயேச்சை என்று கத்துவதால் பயனென்ன? அரசியல் சீர்திருத்தக்காரர்கள் என்ன கத்தினாலும் எத்தனை 144-ஐ மீறினாலும் அவர்கள் இந்தியாவுக்கு விடுதலையைக்கொடுக்க முடியாதென்பது திண்ணம். ஆகையால் இந்தியாவுக்கு விடுதலையைக் கொடுக்கக்கூடியவர்கள் சமுதாய சீர்திருத்தக்காரர்களாதலின் அவர்கள் மகாநாடு தான் மிகவும் அவசியம் என்போம். இம்மகாநாட்டை எல்லோரும்ஆதரித்து இந்தியாவின் விடுதலையைக்கோர விரும்புகின்றோம்.

இதைக்கண்ணுறும் தனவான்கள் தங்களால் இயன்ற பொருள் உதவி புரிந்து நவம்பர் மாதம் 26, 27-தேதிகளில் நடக்கும் மகாநாட்டையும் எங்களுடைய தென்னிந்திய சமுதாய சீர்திருத்தச் சங்கத்தையும் பெருமைப்படுத்துவார்கள் என்று மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம். இங்ஙனம்,

A. M. கோட்டிலிங்கம், C. R. இரத்தினவேலு, } காரியதரிசிகள்.

## சென்னை உலகம்.

(லாலா லஜபதிராய் எழுதியது.)

திரு. மு. ப. மொழிபெயர்ப்பின்.

சாராம்சம்.

{இதை அவசியம் ஊன்றி வாசிக்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.}

பஞ்சாப் தேசபக்தரும், சென்னை வாசிகளால் மெரிதும் 'பாஞ்சால சிங்க' மென்றும், 'பாஞ்சாலதெய்வ'மென்றும் கொண்டாடப் படும்படியான பெரியாருமாகியலாலாலஜபதிராய் அவர்கள் சமீபத்தில் தமிழ் நாட்டை வந்து பார்த்து விட்டுப் போனபிறகு நமது சென்னை மாகாணத்தைப் பற்றித் "தியாக பூமி" யென்னும் பத்திரிகையில் வெளியிடுள்ள அபிப்பிராயம்:—

"நான் இதற்கு முன் இரண்டொரு தடவை சென்னைக்கு சென்றிருக்கின்றேன். ஆனாலும் சென்னையின் உண்மை நிலையை விசாரித்து அறிவதற்குப் போதிய சந்தர்ப்பம் அப்போது கிடைக்கவில்லை. இப்பொழுது நான் அறிந்தவற்றைத் தெரிவிக்கிறேன்.

வடஇந்தியாவில் இந்துமுஸ்லீம்கலவரங்களால் எப்படி மக்கள் பிரிவு பட்டுத் தொந்தரவு பட்டு வருகின்றார்களோ அதுபோலவே சென்னையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரென்னும் சச்சரவால் பெரிதும் கலவரமேற்பட்டுத் தொந்தரவுஏற்பட்டிருக்கிறது. எந்த இடம் நமது பண்டைக் காலத்து நாகரீகத்தின் அறிகுறியும், இந்து மதத்தின் உண்மைத் தத்துவங்களும் ஒரு சிறிதுகூடக் காணப்படாமல் மறைபட்டுக்கிடக்குமோ அந்த இடத்திற்கு நிதர்சனமாக சென்னையைச் சொல்லலாகும்.

புராணகாலத்தின் பெரியார்களாகிய சங்கார், மத்துவர், ராமாநுஜர் ஆகிய மூவரும் சென்னையில் பிறந்தவர்கள். இச்சென்னை மாகாணம் அப்பெரியார்களால் கற்பிக்கப்பட்ட இந்து நாகரிகத்தைப் பின் பற்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நான் இச்சென்னையைப் பார்த்தவரையில் இந்து மதத்தின் பேரால் எங்கெங்கு நடவடிக்கைகள் பழக்க வழக்கத்திலும் அநுஷ்டானத்திலும் இருந்து வருகிறதாக அறிகிறேனோ அவைகள் ஒருக்காலமும் நம்மை சுயராச்சியத்திற்குச் செலுத்திக் கொண்டு போக முடியாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

சென்னையில் வேதாந்தமும் இந்து தத்துவ சாஸ்திரமும் வெகு உயர்ந்த நிலையில் இருக்கின்றன. ஆனால் அவற்றின் தர்மமும் பிரத்தியட்ச வாழ்வும் மிக மிக இழிவான நிலைமைக்குப் போய் விட்டன.

சென்னையிலிருக்கும் கோவில்களின் கட்டட நிர்மாணங்களெல்லாம் ஆகமத்தின்படி மேலானவைகளாயிருந்தபோதிலும்நடவடிக்கையில் முழுதும் ஆபாசங்கள் நிறைந்த அடைப்புக்களாகவே யிருக்கின்றன. அவைகளின் நாலாபக்கங்களிலும் அநாச்சாரமும், அநாகரீகமுமான வாழ்வே காணப்படுகின்றன. சென்னை வாசிகளின் ஆங்கிலப்படிப்பானது அவர்களுடைய மேற்கண்ட கோட்பாடுகளையும் பழக்க, வழக்கங்களையும்கொஞ்சமும் திருத்த முடியவேயில்லை- அன்றியும் இவர்களுடைய வகுப்புச் சண்டையும், ஒருவரை ஒருவர் அளவு கடந்து வெறுப்பதையும் பார்த்து எனக்கு மிகவும் துக்கம் உண்டாயிற்று.

சென்னை இந்துக்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம், அவையாவன:—பிராமணர்கள், பிராமணரல்லாதார்கள், தீண்டாதார்கள். சமீப காலம் வரையில் இந்த ராஜதானியின் இராச்சிய அதிகாரங்கள் முழுவதையும் பிராமணர்கள்கைப்பற்றிஇருந்துவந்ததாகத் தெரிகின்றது. அந்நிலைமையில் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாகப் பிராமணரல்லாதாரில் ஒரு கட்சியார் "பிராமணரல்லாதார் இயக்கத்தை" ஆரம்பித்தார்கள். பிராமணர்களும் பிராமணரல்லாதர்களும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பதற்காகவே இரு கட்சிகளாகப் பிரிந்து கொண்டார்கள் என்று சொல்லலாம். ஆனாலும்இருவகுப்பாரும் ஒருவரை ஒருவர் பொதுவாகவே எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்றசிலகாலம் வரை காங்கிரசில் பிராமணாதிக்கம் இருந்தது. சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் அனேக பிராமணரல்லாதார்களைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் சென்னை சட்டசபையில் காங்கிரஸ் பிராமணக்கட்சிக்கு மிகுந்த பலம் ஏற்பட்டு விட்டது. ஆனாலும் சென்ற மாதத்தில் ஒவ்வொருவராக அக்கட்சியை விட்டு நழுவி எதிர்கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். அதனால் காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில்தமிழ்நாடுகாங்கிரஸ்கமிட்டிக்கு அதனுடைய கொள்கைகள் என்னவென்று நிர்ணயம் செய்வதே எனக்கு மிகவும் கஷ்டமாக விருக்கின்றது. சென்ற வருஷம் சென்னையில் கூடிய காங்கிரசில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் சார்பாகஇரண்டு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அவைகளுக்கு,ஒருவரை விட ஒருவர்மேலென்று சொல்லும்படியாக வானத்தையளாவும் பெரிய பெரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆனால்எந்தக்காங்கிரஸ் கட்சியும் தற்சமயம் அவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டு வரவில்லை. சென்னைக்காங்கிரஸ் கட்சியின் சக்திஇப்போது சின்னபின்னப்பட்டுப்போகிறதென்பதில்ஆட்சேபனையில்லை.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருடன் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தேன், அச்சமயம் வேறு சிலரும் பக்கத்திலிருந்தார்கள். அந்தச்சமயம் காங்கிரசின் யோக்கியதையைச் சொல்லி எவ்வளவு தூரம் துக்கப்பட்டாரென்பதை இதில் எழுதுவது உசிதமாகத் தோன்றவில்லை. ஆனாலும், அவரே சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் சென்னைக் காங்கிரஸ் கட்சியின் அபிப்பிராயத்திலாவது செய்கையிலாவது ஒற்றுமை இல்லையென்றே வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். காங்கிரஸ் கட்சியில் யார் யார் எவ்வெவ்விதமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்களோ, அவரவர்கள் அவ்வவ்வபிப்பிராயங்களைக் கொண்டு தங்களிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தனித்தனிக் கட்சி சேர்க்க வேண்டியிருக்கின்றது. மேலும் வெவ்வேறு அபிப்பிராய முள்ளவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கட்சி சேர்த்துக் கொண்டு தங்கள் தங்கள் அபிப்பிராயப்படி வேலைசெய்ய வேண்டும். அப்படியானால் தான்காரியம் நடைபெறு என்றுசொன்னார் ஆனால்என்னகாரியம் என்பதைப்பற்றிமாத்திரம்சொல்லவில்லை.

பொதுவாகத் தன்னெதிரில் மூன்று விஷயங்கள் இருக்கின்றன வென்றுமட்டும்அவர் சொன்னார், அவற்றில் ஒன்று இந்தியாவின் முழுச்சுதந்திரம் என்றும், இரண்டாவது பொது ஜனங்களைத்தங்கள் கட்சியில் சேர்ப்பது என்றும் மூன்றாவது அவைகளுக்காகப் பணம் சேர்ப்பது என்றும் சொன்னார். கொஞ்ச காலமாக முழுச் சுதந்திரம் என்கின்ற பேய் சில இந்தியரைப் பிடித்திருக்கிறது. முழுச்சுதந்திரத்தையடைய ஒருவரும் இஷ்டமில்லையென்று சொல்ல மாட்டார்கள், ஆனால் முழுச்சுதந்திரமோ அரைச்சுதந்திரமோ என்பவைகள் வெறும் வாய்ப் பேச்சுக்களால் கிடைக்கக் கூடியவையல்ல, ஆனால் முழு அரசியல் வேலைகளின் அந்திவாரமே வெறும் வாயளப்பின் ஆதாரத்தின் மேலேயே நிற்கிறது. வாலிபர்கள் மகாநாடுகளில் மேலும் மேலும் வார்த்தைகளைப்பேசுகிறார்கள். வயது முதிர்ந்த தலைவர்களின் மேல் அதிருப்தியைத் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு விரோதமாக வெகு ஆவேசமாய்ப் பேசுகிறார்கள். ஆனால் அவைகளை பதட்டத்தின்பைத்தியக்காரத்தனம் என்று தான் சொல்ல வேண்டும், ஏனெனில் இம்மாதிரி ஆவேசமானவார்த்தைகளினால் இதுவரையில்எவ்விதமானபலனும்ஏற்படவில்லை.

சாதாரணமாக மகாத்மா காந்தியின் சொற்படி மூன்று வேலைகளிருக்கிறன. அவை அன்னிய துணிவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமை. இவற்றுள், சென்னையில் இந்து முஸ்லீம் வேற்றுமை அவ்வளவு கொடூரமான நிலைமையில் இல்லை. ஆனால் சென்னைத் தலைவர்கள் இதை ஒழுங்கு படுத்தப் பிரவேசித்ததின் பலனைப் வேற்றுமையை அதிகப்படுத்தி விட்டார்கள்.

அடுத்தபடியாகக் கத்தர் பிரசார வேலையை எடுத்துக்கொள்வோம்- அது இப்போது காங்கிரஸின்மேற்பார்வையிலில்லை- அதை மகாத்மா அவர்கள் அகிலபாரத சர்க்கா சங்கத்தின் மூலமாகநடத்திவருகிறார். தேச முழுவதிலும் இருநூற்றைம்பது கத்தர் பண்டகசாலைகளைத்திறந்து வைத்திருக்கிறது. நான் கத்தர்பிரசார விஷயமாக என்னுடைய அபிப்பிராயத்தை மற்றொரு கட்டுரையில் வெளிப்படுத்துகிறேன். ஆதலால் அதை வரையாமல் இங்கே விட்டுவிடுகிறேன். ஆனால் சென்னை காங்கிரஸ் தலைவர்கள்தாங்கள் காங்கிரஸ் காரர்களென்ற முறையில் கத்தர் விஷயமாக விசேஷ வேலை ஒன்றும் செய்யவில்லையென்று எனக்கு நன்றாகத்தெரியும்.

மூன்றாவது விஷயம் தாழ்த்தப்பட்டவர்களுடையது. சென்னை காங்கிரஸ் தலைவர்கள் இவ்விஷயத்தின் பக்கம் மறந்துகூடத் தலைவைத்துத்தூங்கவில்லையென்றுதோன்றுகிறது. சென்னை காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளாகவே இன்னமும் குருட்டுநம்பிக்கை இருந்து வருகிறதுமல்லாமல் இக்

துபுராணங்களில் கற்பிக்கப்பட்ட எல்லாவேற்றுமைபாடுகளும் அவர்கள் உள்ளத்தில் இன்னமும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் அவர்கள் தங்கள் சமூகவாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டாக ஒரு வேலையையும் செய்வதே இல்லை. அன்றியும் தீண்டாமையை ஒழிப்பதன்பொருட்டு இந்தமாகாணத்தில் ஏதாவதுவேலை நடத்தியிருந்தால் அது அவ்வளவும் வெளிமாகாணங்களிலிருந்து வரப்பட்ட பொருளுதவியால் நடந்து வருகிறது.

எல்லாவற்றிலும் இழிவான நிலைமலையாளத்தில் தீண்டாதார்களுடையது. நான் மலையாளத்தில் தீண்டாதார்களின் நிலையை அறிவதற்குச்சிலநாட்கள்செலவிட்டேன். அவர்களின் நிலைமையையும், தீண்டாமையையொழிக்கவேண்டிய அவசியத்தையும் அவ்வேலையிலிருக்கும் கஷ்டத்தையும் நோக்கி மிகமிகத் துக்கித்தேன். அங்கு நான் எதை பார்த்தேனோ, எதைக்கேட்டேனோ அவைகளைப்பற்றி மற்றொரு வியாசத்தில் எழுதுகிறேன். ஆனால் அதை இங்கு சொல்லாமலிருக்கமுடியாது. அதாவது, எந்தஜனங்கள் சமூக சீர்திருத்த மில்லாமல், அரசியல்சுதந்திர இயக்கம் நடத்துகின்றார்களோ அவர்கள் தேசத்தின் உண்மை நிலையை அறியவில்லையென்பதுதான். எதுவரைக்கும் அவர்கள் உண்மையாகக் கபடமற்று ஹிந்துசட்டத்தின் (சமாஜத்தின்) ஆசாரப் புரட்டுகளை மாற்றுவதற்கு முயற்சிசெய்ப வில்லையோ அதுவரைக்கும் விடுதலை அடைவது என்பது ஒருக்காலும் முடியாதகாரியம் என்பேன். நான் எப்பொழுதும் இந்த அபிப்பிராயமுடையவனாயிருந்தபோதிலும் சென்னையின் நிலைமையைப் பார்த்தபிறகு இந்தஎண்ணம்முற்றிலும் உறுதிப்பட்டு விட்டது. அன்றியும் சென்னையில இதுவரையில் ஆசாரச்சீர்திருத்த விஷயமாக ஒருகாரியமும் செய்யப்படவில்லை என்றே சொல்லுவேன். அங்கேசில கனவான்கள் பிரார்த்தனாசமாஜத்தினுடையவும் பிரம்மஞானசபை (தியோசாபிகல் சொஸைட்டி) யினுடையவும் நோக்கங்களைக்கொண்டு ஆசாரச்சீர்திருத்தத்தி லீடுபட்டிருக்கிறார்கள். ஆனால் படிப்புள்ளஜனங்கள்கூட ஆசாரச்சீர்திருத்தத்தை மதவிரோதமென்றும், அனாவசியமென்றும் கருதுகிறார்கள்.

இத்தடவையிலும் சென்னை மாகாணத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள பெரிய வைணவ கோவிலைப்பார்த்தேன். இக்கோவிலில் ஸ்ரீரங்கநாதரின் பூஜை நடக்கிறது. இராமானுஜாச்சாரியின் விசிஷ்டாத்வைதமுறைப்படி இங்கே தெய்வவழிபாடு நடக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் (என்னை மன்னிக்க வேண்டும்) நான் அந்தகோவிலைச்சுற்றியுள்ள எல்லா விஷயங்களையும் கண்ணுற்று மிகவும் வெறுப்படைந்தேன். வெகுநேரம்வரை ஆழ்ந்ததுக்கத்தில் மூழ்கிவிட்டேன். எனக்கு அந்தக்கோவிலில் மனிதத்தன்மைக்கு ஏற்றஒரு விஷயமும் புலப்படவில்லை. அவ்விடத்தில் நடக்கும் ஆபாசாரங்கள் மனிதன் சகிக்கக்கூடியதல்ல. பொட்டுகளையும் பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியுடைய பெரியபெரிய [illegible] பண்டிதர்களுடைய சம்பாஷணை [illegible]

திலிருந்து வெறும் புத்தகத்தங்களை வாசித்தலால்மட்டும் மனிதனுக்கு அறிவு ஏற்பட்டுவிடாது என்று நிர்ணயம் செய்துகொண்டேன். நான் ஏதோஒரு புதுமதத்தைப்பிரசாரம் செய்கிறவனல்ல. நான் எல்லாமதங்களினுடையும் துக்கமடைந்து மதகட்டுப்பாடுகளிலிருந்து விலகிக்கொண்டவன். ஆனால் எது மனிதனுக்குநன்மைபடக்கூடுமென்றும் எது நன்மை பயக்காதென்றும் தெரிவதற்குப் போதிய அறிவும் சக்தியும் என்னிடமிருக்கிறது. சென்னை மாகாணத்தில் உள்ள கோவில்களினுடைய பூஜை முக்கிய நடைமுறைமை சமூக வீழ்ச்சி நாசத்திற்கே கூட்டிச்செலுத்துகிறதென்பது எனக்குநன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. எந்தெந்தக்கோவில்களில் தெய்வவழிபாட்டின் பெயரால் துராசாரம் (விபசாரம்) நடக்கிறதோ, எங்கே இதுவரையிலும் ஜனங்கள் விபசாரத் தொழிலைக் கோவில்களின்வழிபாட்டின் ஒருமுக்கியமாக கருதுகின்றனரோ, எந்தஜனசமூகத்தில் நாளிதுவரை யாராவதொருவருடைய கடவுள்பக்தியை தெரிவிப்பதற்கு நெற்றியில்ராமம்பூதவியகுறிகள் நீண்டோ அகன்டோ வட்டவடிவமாகவோ இருக்கவேண்டியது அவசியமென்றும் கருதப்படுகிறதோ அந்த ஜனசமூகத்தில் அரசியல் சுதந்திரத்தைப்பரவச்செய்வது ஒருக்காலும் முடியாதகாரியம். மதசம்பந்தமாகவோ இராஜீய சம்பந்தமாகவோ சமூகசம்பந்தமாகவோ மற்றுவேறு எதுசம்பந்தமாகவானாலும் சுதந்திரப்பிரசாரம் செய்ய முற்பட்டால் அதில் முதலாவதாக மனித சுதந்திரம் கொஞ்சமாவது வெளிப்படவேண்டும். எந்தமதத்தில் பகுத்தறிவோடு யோசனைசெய்யும் மனோபாவத்திற்கு இடம் சற்றேனும் இல்லையோ அதில் இராஜீய சுதந்திர நோக்கத்தைப் புகுத்தல் அசாத்திய மில்லாவிட்டாலும் நிச்சயமாகச் சுலபத்தில் சாத்தியமாக்கக்கூடிய காரியம் அல்லவென்றே சொல்லுவேன்.

நமது சென்னை சகோதரர்கள்! பெரிய ஜாலவித்தைக்காரர்கள். வாய்க்கணக்கில்பெயர் படைத்தவர்கள். வேதாந்தம் பேசுவதிலோ இணையற்றவர்கள். எழுதுவதிலும்பேசுவதிலும் மகா மேதாவிகள். ஆனால் செய்கையிலும் மதவிஷயத்திலும் அவர்களுடைய நடவடிக்கைகள் கீழ்கண்ட இரண்டிலொன்றாகத்தானிருக்கவேண்டும். அதாவது, அவர்களுடைய புத்தி அத்துறைகளில் செல்லவிடாதவர்கள் அல்லது மிகவும் கொடிய வஞ்சகர்களாகவிருக்கவேண்டும்.

அடிமைத்தனமும் வஞ்சகத்தின் [illegible] தம் எங்கே பதத்தின் [illegible] வெளிவேஷத்தையே முக்கியமாகக் [illegible] ளப்படுகிறதோ அங்கே [illegible] மைத்தனமும் பிறகு [illegible] முடன் உண்டாகி [illegible] வாழ்க்கை [illegible] இரண்டும் [illegible] படுகின்றன. சென்னை [illegible] மதத்தின் நிலைமையையும் சமூகத்தின் நிலைமையையும் பார்த்து சென்னைக்கு ஒரு தயானந்த ரிஷியின் அவசியமிருக்கிறதென்று எனக்கு எண்ணமுண்டாயிற்று. சென்னையைப்போலொத்த குருட்டுநம்பிக்கைகொண்ட [illegible] சீர்திருத்த [illegible]

## ராமநாதபுரம் ஜில்லா சபைத்தலைவர்.

### ஊழியன் எழுதுவது

இராமநாதபுரம் ஜில்லா போர்டுத் தலைவராக திருவாளர் சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பதை அறிய மிகமகிழ்ச்சி கொண்டோம். திரு நாடார் அவர்கள் சென்ற பல ஆண்டுகளாக சென்னை சட்டசபையில் ஓர் அங்கத்தினராகயிருந்து வருகின்றார். தம்சமூகமுன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டு வந்திருக்கின்றார். வகுப்பு வேற்றுமையால் பல இன்னல்களுக்குட்பட்டு வந்த சமுதாயத்தில் நாடார் வகுப்பும் ஒன்றாகும். எனவே இவ்வகுப்பினர் இச்சில்லாவில் வசிக்கும் மக்களின் ஒரு பெரும் பகுதியினராகவிருந்தும் ஜில்லா போர்டு போன்ற பொது ஸ்தாபனங்களில் தலைமை வகிக்கும் உரிமையற்று இருந்தார்கள். தற்போது இக்குறையை அகற்ற திரு சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை, இந்த ஜில்லா போர்டின் தலைவராக நியமித்ததற்காக சென்னை அரசாங்கத்தாரை நாம் பாராட்டுகின்றோம். திரு நாடார் அவர்கள் ஜில்லாமக்களின் குறைகளை நன்குணர்ந்து அவற்றை மாற்றுந்துறைகளில் முயலுவார் என்றெண்ணுகின்றோம்.

---

ஜிகளால்கூட முடியாது என்பதாக தோன்றுகின்றது. நாளிதுவரை ஏற்பட்ட சீர்திருத்த ஸ்தாபனமாகிய பெரியகப்பல்கள் எல்லாம் சென்னைஎன்கிற பாறையில் மோதி உடைபட்டு மூழ்கிவிட்டதாகவே தெரியவருகிறது. ஆரிய சமாஜத்தாலும் மதராவில் சந்தோஷகரமான வேலைஎதுவும் செய்யமுடியவில்லை. சென்னையில் கரைகண்ட பயமற்ற சீர்திருத்தக்காரர்களின் தேவையிருக்கிறது.

இதுவரையிலும் சென்னையில் ஆரியசமாஜத்தைப்பரப்புவதற்கு எவ்வளவு முயற்சி செய்யப்பட்டதோ அவ்வளவுக்குப்போதிய பலன்கிடைக்கவில்லை. அவ்விடத்திய சமய சமூகநிலைமைவிஷக்காற்று சூழ்ந்ததாயிருக்கின்றது. மிகக்குறுகிய நோக்கமுடையதாயிருக்கிறது. இந்நிலைமையில் இம்மாகாணத்தில் கொஞ்சமாவது காரியசித்தியடைவதற்கு தக்கயோக்கியதையுடைய ஒரு தீரன்வேண்டும். சென்னை மாகாணத்தாருள்ளேயே அப்படி ஒருவர் உண்டாவாரென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. மற்ற மாகாணங்களைக்காட்டிலும் இம்மாகாணத்திலுள்ள பெண்கள்தான் கூடப்படித்தவர்களாவே இருக்கிறார்கள். இதுதான் நம்பிக்கையைக் கொடுக்கக்கூடியது. பெண்களில் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் காரியம்செய்துகாட்டுவார்களென்று நம்புகிறேன். ஏனெனில் சென்னை மாகாண ஆண்பிள்ளைகளின் யோக்கியதையில் எனக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை. அந்நாட்டு ஆண்மக்கள் வெறும் பேச்சுக்காரர்கள்; வாய்ச்சவடால் செய்பவர்கள்; விண்ப்ரகாரம் செய்பவர்கள்; காரியத்திற்கு உதவாதவர்கள்.

# "ரிவோல்ட்" ஆரம்ப விழா.

## ஈரோட்டில்

## என்றுமில்லாத குதூகலமும் உணர்ச்சியும்.

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர்

திரு W. P. A. சௌந்திரபாண்டிய நாடார் M. L. C.

## திறப்பு விழா ஆற்றினர்.

கோவை ஜில்லா போர்டு தலைவர்

திரு. C. S. இரத்தினசபாபதி முதலியார் M. L- C., தலைமை வகித்தார்,

### முக்கிய வெளியூர் கனவான்கள்.

சென்ற [6—11—28] காலை மதுரையிலிருந்து திருவாளர்கள் டப்ளியூ. பி. ஏ. சௌந்திரபாண்டிய நாடார் எம். எல். சி, உத்தமபாளையம் ஜமீன்தார், எஸ். அய்யாத்துரை முதலியார், சோழவந்தான் சுப்பிரமணிய முதலியார், சென்னை ஜே. எஸ். கண்ணப்பர், டாக்டர் என். தண்டபாணி பிள்ளை, திருநெல்வேலி சுப்பிரமணியம், கோவை ஜில்லா போர்டு தலைவர் சி- எஸ். ரத்தினசபாபதி முதலியார், எம். எல் சி, பழனிச்சாமி நாயுடு ஆகியோர் ரயிலில் வந்து இறங்கினார்கள். மேற்படியோர்களை ஈரோடு சுயமரியாதைச் சங்கத்தாரும் நகர பிரபலஸ்தர்களும் வரவேற்று அழைத்துச் சென்றனர்- காலை சிற்றுண்டி முடிந்தது. திருவாளர் சௌந்திரபாண்டிய நாடார் அவர்களும் திரு. ஜே- எஸ் கண்ணப்பர் அவர்களும் மேட்டூர் தேக்கத்தைப் பார்வை இடுவதற்காக சென்று மாலை 3 மணிக்கு திரும்ப வந்து சேர்ந்தனர்.

### பெண் பள்ளிக்கூடம்

அங்கு ஏராளமான ஜனங்களும் பெண் மக்களும் குழுமியிருந்தனர், பள்ளிக்கூடம் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது- அப்பாடசாலைப் பெண்களால் செய்யப்பட்ட அநேக விசித்திர தையல் வேலைகளும் பூ வேலைகளும் பொம்மை வேலைகளையும் கண்காட்சியாக வைக்கப்பட்டிருந்தன- திரு- நாடார் அவர்களும் திரு- கண்ணப்பர் அவர்களும் அதைப் பார்வையிட்டு அவர்களின் வேலைத் திறமையை மெச்சி சில உயர்ந்த சமான்கள் விலைக்கு வாங்கினார்கள்.

### முனிசிபல் மண்டபம்

பின்னர் பலத்த சகோஷத்தினிடையே முனிசிபல் அங்கத்தினர்களால் மண்டபத்திற்குள் அழைத்து வரப்பட்டனர்- அவ்விடம் முனிசிபல் கௌன்சிலர்களும் நகர பிரபலஸ்தர்களும் வாலிபர்களும் மாணவர்களும் பெண்களுமாக சுமார் 1000 ஜனங்களுக்கு மேல் குழுமி இருந்தனர்-

இன்று மாலை 3 மணிக்கெல்லாம் ஈரோடு ஒரு பெரிய திருவிழாநகரம் போல் தோன்றியது- தெருக்களெல்லாம் சுத்தம் செய்யப்பட்டு தண்ணீர் தெளித்திருந்தது- மூலைமூலையும் தெருக்களில் மத்தியிலும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன- ஒவ்வொருவீட்டு வாசலிலும் பெண்கள் துப்புரவாக மெழுகிக் கோலமிட்டிருந்தனர்- மாணவர்களும் வாலிபர்களும் கூட்டம் கூட்டமாக கூடிக்கொண்டு குதூகலமாக 'ரிவோல்ட்' திறப்பு விழாவை முன்னிட்டுப் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

### முனிசிபல் வரவேற்புப்பத்திரம்

மாலை 4 மணிக்கு திரு சௌந்திரபாண்டிய நாடார் அவர்களும் திரு ரத்தினசபாபதி முதலியார் அவர்களும் திரு. கணணப்பர் அவர்களும் முனிசிபல் சேர்மன் திரு- பால சுப்பிராயலு நாயுடு அவர்களுடன் மோட்டாரில் முனிசிபல் நகர பிரபலஸ்தர்கள் முதலியோர்களால் புடைசூழ பாண்டு வாத்தியத்துடனும் ஊர்வலமாக முனிசிபல் பெண்பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் சேர்மன் திரு- பாலசுப்பராயலு நாயுடுகார் திரு- நாடாருக்கு ஒவ்வொரு முனிசிபல் அங்கத்தினரையும் பிரமுகர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார்-

பின்னர் சிறுமாணவிகள்வரவேற்பு வாழ்த்துக்கூற பெரிய மாணவிகள் திரு நாடார் அவர்களின் பேரில் கும்மிப் பாட்டும் வந்திருந்தவர்கள் ஆனந்திக்கும்படியாக நல்ல ராகத்துடன் பாடிக்கொண்டு கும்மி அடித்தார்கள்-

அதன் பிறகு இவ்வூர் முனிசிபல் கௌன்சிலர்கள் சார்பாக இவ்வூர் பிரபல வியாபாரியும் முனிசிபல் கௌன்சிலரும் செல்வந்தருமான திரு- முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள் திரு நாடார் அவர்களுக்கு தமிழில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

திரு நாடார் அவர்களும் அதற்குத் தக்கவாறு பதிலளித்தார்கள்-

பின்னர் திரு ஈ- வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் திரு நாடார் அவர்களின் திறமையையும் தேசத் தொண்டையும் தாராள நோக்கத்தையும் 6 வருடகாலமாக சட்டசபையில் செய்து வரும் ஊழியத்தையும் அவர்களின் செல்வாக்கையும் ஜனங்களுக்கு எடுத்துரைத்தார்கள்- பின்னர் திரு. முத்துக் கருப்பன் செட்டியார் அவர்கள் வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் அப்படியே அங்கிருந்து ஊர்வலமாக செல்லுகையில்

### 'ரிவோல்ட்' ஆரம்பவிழா

ஒவ்வொரு முக்கியமான இடங்களிலும் தலைவர்களுக்கு மலர் மாலை சூட்டினார்கள். ஊர்வலம் பெரிய கூட்டத்துடனும் ஜே! சப்தம் முழங்க ஆடம்பரத்துடனும் குதூகலத்துடனும் 'ரிவோல்ட்' திறப்புவிழா இடத்திற்கு வந்துசேர மாலை 7 மணியாய்விட்டது-

### ரிவோல்ட் கட்டிடம்

'ரிவோல்ட்' பத்திரிகை ஆபீசிற்கென்றும் சுயமரியாதைப் பிரசாரகர் போதக சாலைக்கென்றும் உபயோகப்படும்படியாக திரு-நாயக்கர் அவர்களால் ரூபாய் 30,000[முப்பதினாயிரம் செலவிட்டு] 3 அடுக்கு மாடி வைத்துக்கட்டப்பட்ட கட்டடத்தின் மூன்றாவது மேல் மாடியில் நமது 'ரிவோல்ட்' திறப்புவிழா நடத்த ஏற்பாடாகி இருந்தது- அன்று அக்கட்டடமானது ஒரு பெரிய அரண்மனை மண்டபம் போல்விளங்கினது-பிரகாச லைட்டுகள் கண்களைக் கூசச் செய்து கொண்டிருந்தன- வெளி கேட்டிலும் ஒவ்வொரு மண்டப வெளியிலும் தூண்களிலும் வாழை கமுகு, தென்னை, பாக்கு மரங்களாலும் தோரணங்களாலும், புஷ்பங்களாலும் குரோட்டன்ஸ்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஊர்வலமாக வந்தவர்களை 'ரிவோல்ட்' நடு மண்டபத்திற்கு ஜே சப்தத்துடன் அழைத்துச் சென்றனர்- மண்டப முழுதும் ரத்தின கம்பளங்கள் விரிக்கப்பட்டு தலைவர்களுக்குக் கதர் ஆசனமும், கதர் மேஜையும் போடப்பட்டிருந்தது- வெளி ஊர்களிலிருந்தும் பக்கங்களிலிருந்தும் இவ்வூர் வியாபாரிகளும், முனிசிபல் சேர்மனும் கவுன்சிலர்களும் மாணவர்களும் மாணவிகளும் வாலிபர்களுமாக சுமார் 1000 ஜனங்களுக்குமேல் குழுமியிருந்தனர்-

### விஜயம் செய்த முக்கியஸ்தர்கள்.

திருவாளர்களான சி. எஸ், ரத்னசாபதி முதலியார் அவர்கள், எம். எல். சி. டிஸ்டிரிக் போர்டு பிரசிடெண்ட், முனிசிபல் சேர்மன் கோவை. W. P A. சௌந்திர பாண்டிய நாடார் அவர்கள், எம். எல். சி. ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர், சுப்ரமணிய முதலியார் சோழவந்தான், எஸ். அய்யாத்துரை முதலியார் மதுரை, ஜே. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணிப்பிள்ளை, கே, சுப்ரமணியப் பிள்ளை திருநெல்வேலி, கைவல்யசாமியார், ராவண தாசர், எஸ். குருசாமி கோவிந்தசாமிப்பிள்ளை, சாமிசிதம்பரனார், சா- ராமசாமி நாயக்கர், எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். ஆர். பால சுப்பராயலு நாயுடு சேர்மன், ஈரோடு முனிசிபல் கவுன்சிலர்கள் எம். எஸ். முத்துகருப்பஞ்செட்டியார், கே. ஏ. ஷேகதாவுத், எம். சிக்கையநாயக்கர், முத்து நாயுடு, கே. எம். சீனிவாசம்பிள்ளை மொட்டையப்ப முதலியார், பூவாத்தா கவுண்டர், சுந்தரமய்யர், டாக்டர் டேவிட், கே. ஷண்முகம் பிள்ளை முதலியவர்களும், முனிசிபல்கண்ட்ராக்டர் திருவேங்கடநாயுடு, சதாசிவம் செட்டியார் அவர்கள் ரிடையர்டு

தாசில்தார், வெங்கிட பெருமாள் நாயுடு, கிடையர்டு தாசில்தார், எம். ஆர். செலமேது நாயக்கர், கே. கிருஷ்ணசாமி நாயக்கர், திருவேங்கிடசாமி நாயக்கர், கே. ராமசாமி நாயக்கர், ராஜநாயகம் பி. ஏ.எல்.டி., டி. எம். நரசிம்மாச்சாரியார் ஈ. எஸ். கணபதி அய்யர் குப்புசாமி அய்யங்கார் ஏ. நல்வரர், பாலு முதலியார் திருச்செங்கோடு, பெரியசாமி முதலியார் நூல் வியாபாரி.

## நாயக்கர் முன்னுரை

பின்னர் அம்மாபெருங் கூட்டத்தினிடையே, நமது தலைவரும், 'ரிவோல்ட்' ஸ்தாபகரும், ஆசிரியருமான திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் எழுந்து 'ரிவோல்ட்' பத்திரிகை வெளியிடும் நோக்கத்தைப்பற்றி ஜனங்களுக்குக் கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தார்கள். அதன் சாராம்சமாவது:—'சகோதரர்களே! நம் பிராமணரல்லாதார் கக்ஷி எவ்வளவோ முக்கிய அடிப்படையான நோக்கங்களைப்பற்றி ஆரம்பிக்கப்பட்டிருப்பது நம் மாகாணத்தில் உள்ளவர்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆனால் வட நாட்டில் உள்ளவர்களுக்கு இந்த இயக்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள போதிய வசதி இல்லாததும் வட நாட்டினர் இவ்வியக்கத்தைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்ளாமலிருப்பதும் அவ்வளவு ஆச்சரியமல்ல. சிறிது நாட்களுக்கு முன் இப்பக்கங்களுக்கு வந்திருந்த வடநாட்டுத் தலைவரில் ஒருவராகிய திருவாளர் கோஸ்வாமியவர்கள் சில நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது திரு கோஸ்வாமி கேட்டதாவது:—"என்ன, இம்மாகாணத்தில் முக்கியமாக 2, 3 பேர்கள் சேர்ந்து கொண்டு, பிராமணரல்லாதார் கக்ஷி என்று வைத்துக் கொண்டு இருக்கிறார்களாமே? அதன் அர்த்தமென்ன? அது வேண்டியது அவசியம் தானா" என்றுகேட்டார். ஏனென்றால், அவருக்குத் தென்னாட்டின் சமாச்சாரமே தெரியாது.

உடனே நான் (ஈ. வெ. ரா.) திரு. ஷண்முகம் செட்டியார் எம். எல். ஏ. அவர்களைக் காட்டி "இவர்களை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "ஆ! நன்றாகத் தெரியும் நானும் அவரும் ஒரே கவுன்சிலில் அங்கமாக இருக்கின்றோம். தென்னிந்தியாவிலிருந்து வரும் கவுன்சிலர்களில் பேச்சு வன்மையிலும், அரசியல் ஞானத்திலும் திறமைபெற்றவர்" என்றார்.

நான் உடனே கோஸ்வாமியிடம் "இவர், இப்பக்கங்களில் உள்ள சில கோயில்களில் உள்ளே செல்ல முடியாதவரு தீண்டாதவராக கருதப்பட்டவர்" என்றுசொன்னேன்.

உடனே கோஸ்வாமி பிரமித்து விட்டார்கள். இது உண்மைதானாவென்றும் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். பிறகு எல்லா விவரங்களையும் நம் இயக்கத்தின் நோக்கத்தையும் சொன்னேன். அவர்களும் அதை அங்கீகரித்தும் தங்களுக்கு இவ்விவரங்களெல்லாம் தெரியவாறு என்றும் எங்கள் வடநாட்டில் இப்படி எல்லாம் இல்லையென்றும் இவ்வியக்கம் அவசியம் என்றும் தாங்களும் ஒத்துழைப்பதாகவும் சொன்னார்கள். வடநாட்டிலுள்ளார்களுக்கு நம்மியக்கம் இன்னதென்று தெரிய முடியாமல் இருப்பதால் நம் இங்கிலீஷ் வாரப்பத்திரிகை அவர்களுக்கு நம் இயக்கத்தின் நோக்கத்தை ஊட்டும், அந்த நோக்கமாகவே "ரிவோல்ட்" வெளியாகிறது.

## நமது எதிரிகள்

முக்கியமாக நமக்கு எதிரிகள் பிராமணர்கள் என்று எண்ணியிருந்தோம் ஆனால் அவர்கள் கூடுமானவரை எதிர்த்துப் பார்த்தார்கள். பின், தங்கள் பித்தலாட்டக் காரியம் இங்கே செல்லாது என்று கண்டு அவர்களே இவ்வியக்கம் அவசியம் வேண்டியதுதான் என்று வெளியளவிலாவது சொல்லிக் கொள்ளுகிறார்கள்,

ஆனால், நமக்கு எதிரிகள் நமக்குள்ளாகவேயிருக்கிறார்கள். ஏறக்குறைய தென்னாட்டிலும், முக்கியமாக தமிழ் மக்களிடை நமது நோக்கம் எல்லாருக்கும் பிடித்திருக்கும். ஆனால் இது பிடியாதது யாருக்கு என்றால், நம்மவர்களிலே மதப் பைத்தியம் பிடித்தவர்களுக்கும் பண்டிதர்கள் என்பவர்களுக்கும் 100 க்கு 90 பங்கு பிடியாது.

ஆனால் இப்பொழுது பிராமணர்கள் எவரும் நம்மை எதிர்க்க நேரில் வருவதே கிடையாது. ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சில பிரமுகர்களும், தங்கள் கக்ஷியானது பிராமணர்களை உத்தியோகத்துக்கு வரவொட்டாமல் தடுத்து அந்த உத்தியோகங்களை நாம் வகிக்க வேண்டும் என்ற நோக்கங்கள் கொண்டிருக்கின்றது என்று நினைக்கிறார்கள். அது மாதிரியே திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்களும் தனக்கு ஒரு உத்தியோகமும், தன்னால் சிலருக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுக்கக் கூடிய யோக்கியதையும் செல்வாக்கும் வந்தவுடன் நம் கக்ஷியின் முக்கிய நோக்கமாகிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே (தனித் தொகுதியே) வேண்டாம் என்கின்றார்கள். நம் இயக்கத்தின் முக்கிய நோக்கமானது பழைய மூடபழக்கவழக்கங்களை அடியோடு ஒழிப்பது, வேதம், புராணம், இவைகளின் புரட்டுகளை வெளியிடுவது, நம் பகுத்தறிவை உபயோகித்து மேல் நாட்டார்களைப்போல அநேக முன்னேற்றத் தக்க அற்புதங்களைக் கண்டு பிடிப்பதுமேயாகும். இந்நோக்கத்தோடேயே இன்று ரிவோல்ட் பத்திரிகையைத் திறப்பதற்கு நம் இயக்கத்துக்கு ஒரு மணியாகிய திரு நாடார் அவர்கள், அவர்களுடைய அநேக சிரமங்களுக்கிடையே இவ்விடம் விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நான் முன்பே முனிசிபல் வரவேற்பின் போதே சொன்னேன். அத்துடன் இவ்விழாவை நடத்திக் கொடுப்பதற்கு தலைமை வகிக்கும்படி நமது ஜில்லா தலைவரும் நம் நண்பருமான திரு. சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் எம். எல். சி. அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறி அமர்ந்தார்,

## திரு எஸ் ராமநாதன் முன்னுரை

பின்னர் "ரிவோல்ட்" ஆசிரியர் எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் எழுந்து 'ரிவோல்ட்' ஆபீஸ் பத்திரிகையைப்பற்றியும் அந்த திறப்பு விழாவை நடத்தித் தரப்போகும் திரு நாடார் அவர்களின் ஆற்றலைப்பற்றியும் அவரே தகுந்தவர் என்பதைப் பற்றியும் புகழ்ந்து இந்த விழாவிற்குத் தலைமை வகிக்க திரு ரத்னசபாபதி முதலியார் அவர்களே தகுதியானவர்களதலால் அவர்கள் தலைமை வகிக்க தாம் ஆமோதிப்பதாகவும் சொல்லி அமர்ந்தார்,

## சபைத்தலைவர் முன்னுரை

பின்னர் பலத்தகர கோஷத்தினிடையே திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் எழுந்து, இந்த திறப்பு விழாவை நடத்தித் தர பெரியமகான் ஒருவர் வந்திருக்கும்பொழுது எல்லாம் அவர்களே தலைவராய் இருந்து நடத்த வேண்டியிருக்க என்னைத் தலைவராய்ப் பிரேரேபித்தது, முற்றிலும் புதிதே. இருந்தாலும் இன்று வெளியாகப்போகும் பத்திரிகையாகிய 'ரிவோல்ட்' பழய வழக்கங்களை அறவே ஒழித்துவிட்டு புதிதான முறைகளுடன் கிளம்பப்போவதால் நான் வழக்கம் என்பதைவிட்டு விட்டு என் தலைவர் அவர்களின் கட்டளைக் கிணங்கி ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று அமர்ந்தார்.

## சுயமரியாதைச்சங்க வரவேற்பு

பின்னர் ஈரோடு சுயமரியாதை சங்கத்தின் சார்பாக திரு. நாடார் அவர்களுக்கு ஒரு பத்திரம் ஒன்று சாமி சிதம்பரனார் அவர்களால வாசித்துக் கொடுக்கப்பட்டது. திரு. நாடார் அவர்கள் எழுந்து பத்திரத்துக்குப் பதிலளித்தார்கள். அதன்பின் தலைவர் 'ரிவோல்ட்' பத்திரிகையைத் திறந்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள திரு. முதலியாருக்கும் திரு நாடார் அவர்களுக்கும் முறையே திரு. நாயக்கர், திரு. ராமநாதன் இவர்களால் மாலைசூட்டப்பட்டது.

## திரு நாடார்

அவர்கள் பலத்தகர கோஷத்துடன் எழுந்து தனக்கு இதுமாதிரியான ஒரு கௌரவமான சந்தர்ப்பத்தைத் தமது தலைவர் அவர்கள் அளித்ததற்காக நன்றி செலுத்துவதாகவும் இந்நாடு கண் விழிக்க தமிழில் ஒரு பத்திரிக்கையைப்பரப்பி மூடபழக்க வழக்கங்களை அறவே ஒழித்து வருவதோடு, இங்கிலீஷிலும் 'ரிவோல்ட்' என்னும் பத்திரிகை வெளியாவது நம் பாக்கியமே என்றும் அதற்கு தன்னால் ஆன உதவி முழுவதும் செய்வதாகவும் சொல்லி கைதட்டலுடனும் ஆர்ப்பரிப்புடனும் படிப்படியாகவும் 'ரிவோல்ட்' பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் கண்ட அதன் நோக்கத்தின் முதல்பக்கத்தை எல்லாரும் வியக்கும்படியாக வாசித்து, 'ரிவோல்ட்' திறப்பு விழாவை நடத்தினார்கள். பின்னர்,

## திரு கண்ணப்பர்

அவர்கள் பலத்த கைதட்டலிடையே வந்தனோபசாரம் சொல்லும் முகத்தால் எழுந்து சகோதரர்களே இன்று ஒரு புண்ணிய தினமாகும். அதாவது இந்த 'ரிவோல்ட்' பத்திரிகை எப்பொழுது வெளியாகும் என்று ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பத்திரிகையானது ராமனுக்கு சாமியையும்—ராமனுக்கு நாதனையும் ஆசிரியர்களாகக்கொண்டு வெளியாக்கப்பட்டது. 'ரிவோல்ட்' என்றால்சிலர் பயப்பட்டார்கள். சில உத்தியோகஸ்தர்கள் என்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## தஞ்சை ஜில்லா போர்டாரின் தைரியம்.

தஞ்சை ஜில்லா போர்டுக்கு சம்மந்தப்பட்ட ரயில்வே லைனை ரயில்வே போர்டாருக்கு கொடுத்துவிட சம்மதிப்பதாக இவ்வளவு காலம்பொறுத்தாவது ஒரு தீர்மானம்செய்ய முன் வந்ததைப்பற்றி அதன் தைரியத்தை நாம் பாராட்டுகின்றோம். கொஞ்ச நாட்களுக்கு முன் ராக இந்த விஷயம் தஞ்சை ஜில்லா போர்டின் யோசனைக்கு வந்ததில் ஜில்லா போர்டார் ரயில்வே லைனை ரயில்வே போர்ட்டாருக்கு கொடுக்கமுடியாது என்று தீர்மானித்து விட்டார்கள், அது சமயம் அவர்கள் அப்படிச் செய்தது தப்பு என்று சொன்னதுடன் ஜில்லா போர்டு தலைவரையும் சில அங்கத்தினர்களையும் நேரிலும் கண்டு பேசினோம்-அப்படி பேசியதிலிருந்து லைனை ரயில்வே போர்டாருக்கு ஒப்புக் கொடுக்கமறுத்ததின் காரணமெல்லாம் அப்போர்டிலுள்ள பார்ப்பன விஷமத்திற்கு பயந்தும் கட்சிப் பிரதிகட்சி ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதைக்கருதியுமே அப்படிச்செய்யவேண்டியதாக ஏற்பட்டது என்பதை அறிய நேர்ந்தது.

முதலாவதாக இதுவரை எந்த ஸ்தாபனமாவது சர்க்காரார் நடத்திவந்ததைவிட யோக்கியமாகவோ திறமையாகவோ பொது ஜனங்களின்பிரதிநிதித்துவ சங்கத்தால்நடத்தி வருவதாகநாம் ஒப்புக்கொள்ளவே முடியாது. சர்க்கார் ஆட்சிமுறைமோசமானதும் நம்மால் சகிக்கமுடியாததும் ஆனதுஎன்பதைப் பொருத்தவரையில் நமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அவர்களிடமிருந்து நமது கைக்கு மாற்றப்பட்ட எந்த ஒரு சிறு முறையும் அதைவிட மோசமானதாகவும்பொறுப்பற்றதாகவும் நாணயக் குறைவானதாகவுமே நடைபெற்று வருகின்றதே ஒழியவேறில்லை- இது நாம்எந்த இலாக்காவைப் பொருத்துவேண்டுமானாலும் ருசுச் செய்யமுடியும், அதிலும் ஸ்தல ஸ்தாபன இலாக்காக்களில் நடைப்பெற்றுவரும் அயோக்கியத்தனங்களும் நாணயக்குறைவுகளும் ஒழுக்கீனங்களும் எழுதி முடியாததும் எல்லோருக்கும் தெரிந்ததுமான இரகசியமாகவே இருக்கின்றது. இதைப்பற்றி முன்னும் பல தடவை எழுதியும் பேசியும் இருக்கின்றோம்,

எனவே முதலாவதாக இக்காரணங்களாலேயே ரயில்வே போன்றபெரிய பொறுப்புள்ள காரியங்களை ஜில்லாபோர்டு முனிசிபாலிட்டி, தாலுக்கா போர்டு போன்ற ஜனப் பிரதிநிதிசபை என்னும் பொறுப்பற்ற ஸ்தாபனங்களின் சுவாதினத்தில்விடுவது என்பது பெரிதும் ஆக்ஷேபிக்கத்தக்கது என்று தைரியமாய் சொல்லுவோம். ஆனால் எந்த நிலையிலாவதும்பார்ப்பனர்கள் கையில்இருப்பதைவிடபார்ப்பனரல்லாதார் கையில்இருப்பதுமேல் என்பதில் நமக்கு சந்தேகமில்லை- உதாரணமாக திருவாளர் இராமானுஜாச்சாரியார் நிர்வாகத்தையும் திருவாளர் பன்னீர் செல்வம் அவர்களின் நிர்வாகத்தையும்ஒப்பிட்டுப்பார்த்தாலே இது தெரியவரும்

எனவே அரசாங்கத்தாரும் ரயில்வேக்காரரும் செய்வதுமிகவும் மோசமாயிருக்கின்றதே என்றுசொல்வதானால், நமமுடைய ஒற்றுமையையும் பரஸ்பரநம்பிக்கையையும்கட்டுப்பாட்டையும் சுயநலமற்றதன்மையையும் பலப்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் தலையில் பொறுப்பை சுமத்தி அதைநெருக்கி நம்மிஷ்டம் போல் செய்கின்றனையா இல்லையா என்று அதிகாரத்தோரணையில்கட்டளையிட்டு யோக்கியமாகவும் நாணயமாகவும் நடக்கச்செய்ய வேண்டும்; அப்படிக்கில்லாமல் "நீ போனால் கலகமாகிவிடும் நான் போய் செருப்பிலடித்துவிட்டுவந்து விடுகிறேன்" என்று ஒரு சமாதானக்காரன் சொன்னான் என்கின்ற பழமொழி போல் அரசாங்கத்தைப்பார்த்து "உன்னால் அதைநடத்தமுடியாது, என்னிடம் ஒப்புவி, நான் அதை பாழாக்கி விடுகிறேன்" என்பதாகச் சொல்லி அதன் தலையில் சுமத்தவேண்டிய பொறுப்புகளையெல்லாம் நம்ம தலையில்சுமத்திக்கொண்டு. காரியமும் சரியாய்ச்செய்ய முடியாமல் நாணயமாயும் நடக்க முடியால் நிர்வாகத்திற்கு சம்மந்தப்பட்டவர்கள் மாத்திரம் தம், தம், சுய நலத்திற்கு அவ்வுரிமைகளை உபயோகப்படுத்திக்கொண்டு மக்கள் பணத்தையும் நலத்தையும் பாழாக்குவதில் என்ன பலன் என்று தான் கேட்கின்றோம்-

இப்படி எழுதுகின்றநாம் அனுபோகமில்லாமலாவது இது பெரும்பான்மையான விஷயமல்லவென்றாவது கருதி எழுதுகின்றோமில்லை முனிசிபல் சேர்மேன் பதவி ஜில்லா போர்டு மெம்பர் தாலூக்கா போர்டு மெம்பர் ஆனரரி மாஜிஸ்திரேட்டு மற்றும் சில சர்க்கார்சம்மந்தான பொது ஸ்தாபனம் ஆகியவைகளில் இருந்து கொண்டிருந்த போதும் சர்க்காரர் அதிகாரிகள் அனுவசியமாயும் நாணயமற்ற தன்மையாயும் நமது ஆதிக்கத்தில் பிரவேசிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கண்டித்து அரசாங்கத்திற்கு எழுதியும், அரசாங்கத்தார் கவனிக்கவில்லை என்கின்ற காரணத்திற்காக மேல்கண்ட அவ்வளவு பதவிகளையும் ஒரே துண்டுத்தாளில் இராஜினமா கொடுத்தோமானாலும், அந்த சர்க்கார் ஆக்கிரமிப்பு முதலிய அக்கிரமங்களைவிட ஜனப்பிரதிநிதிகளின் பெரும்பாலான நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு மோசமாகவே இருக்கிறது. ஆதலால் ரயில்வே லைனின் நன்மையை பொருத்தவரையிலும் ஜனங்களின் நன்மையைப்பொருத்தவரையிலும் தஞ்சை ஜில்லா போர்டார் லைனை ரயில்வே போர்டுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டதானது மிகவும் பாராட்டத்தக்க விஷயமேயாகும்- இதில் மற்றொரு விஷயம் என்னவென்றால் இதனால் போர்டாருக்கு பொருளாதார விஷயத்திலும் எவ்வித கஷ்டமும் ஏற்படவில்லை என்பது தெரிய வருவதால் தஞ்சை ஜில்லா போர்டார் பார்ப்பன விஷமப் பிரசாரத்திற்கும் பார்ப்பன பத்திரிகைகளின் அயோக்கியத்தனத்திற்கு மசற்றும் பயப்படாமல் தைரியமாய் இத்தீர்மானம செய்ததைநாம் பாராட்டுகின்றோம்.

---

## அநுதாபத் தீர்மானம்-

நேற்று திடீரென்று மார்படைப்பால் காலஞ்சென்ற பாஞ்சால தேசபக்தர் லாலா லஜபதிராய் அவர்களின் குடும்பத்தாருக்கு இவ்வூர் (ஈரோடு) வாசிகளின் அநுதாபத்தைத் தெரிவிக்க நேற்றுமாலை 6-30 மணிக்கு வாய்க்கால்கரையில் வக்கீல் திரு டி எம் நரசிம்மாச்சாரியார் அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. "ரிவோல்ட்" "குடி அரசு" ஆசிரியர்கள் திருவாளர்கள் எஸ், ராமநாதன் M. A. B. L. ஈ வெ ராமசாமி நாயக்கர், ரிட்டயர்டுதாசில்தார் என். வெங்கட்டப்பெருமாள் நாயுடு காரு, விஸ்வநேசன் ஆசிரியர் மாரியப்பா. முதலியவர்கள் லாலா ஜீ அவர்களின் தேசபக்தியைப்பற்றியும் அவரது மரணத்தால் நம் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றியும் சபையோர் மனம் உருகும்படி பேசினார்கள்- கடைசியில் கீழ்க்கண்ட அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கூட்டம் அமைதியாக முடிவுபெற்றது.

ஒப்பற்ற இந்தியத்தலைவரான தேசபக்தசிகாமணியான லாலா லஜபதிராய் அவர்கள் திடீரென்று இன்று காலை, மரணமடைந்ததைக்கேட்டு திடுக்கிட்டுப் போனதுடன் ஈரோடு வாசிகள் கூடிய இந்த மகாநாடானது தங்களுடைய ஆழ்ந்த துக்கத்தை லாலாஜியின்குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்கிறது,

## பார்ப்பனரல்லாதார் சகோதர சங்கம்

காருகுடி ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் 1-11-28ல் ஓர் பொதுக்கூட்டம்கூடி ஷை சங்கம் நிறுவப்பட்டது. சங்கத்திற்கு திருவாளர்கள் வீ. செ. வயித்தியநாத தேவர் தலைவராகவும், எஸ். குமாரசாமித்தேவர் உபதலைவராகவும், எஸ். அரிகிருஷ்ணத்தேவர் காரியதரிசி பொக்கிஷதாராகவும். கே. ஆர், நடராஜன் உதவிக்காரியதரிசியாகவும் தேர்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் நோக்கம் உயர்திரு நாயக்கர் அவர்களின் கொள்கையாகிய ஒற்றுமை, நல்லொழுக்கம், தேசாபிமானம் சுயமரியாதை இவைகளை பார்ப்பனரல்லாதாருக்குள் வளரும்படி சுயமரியாதை வீரர்களைக்கொண்டு உபந்நியாசங்கள் செய்விப்பதென்று தீர்மானிக்கப்பட்டு, சந்தனம், புஷ்பம் தாம்பூலம் சிற்றுண்டிகள் வழங்கியபின் கூட்டம் இனிது கலைந்தது. காரியதரிசி-

## பிரிவுபசாரம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா கீழ ராஜ
குல ராமன் சப்ரிஜிஸ்ட்டரார் திருவாளர்
ஏ. சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ. அவர்கள்
அருப்புக் கோட்டைக்கு மா ற்றப் பட்டிருப்
பதின் நிமித்தம் அன்னாரு க்கு ராமநாதபுரம்
ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்ரீமான் என் ஆதி
மூல நாயக்கரவர்களின் ஆதரவில் கிராம
வாசிகளால் 2-11-2 மாலை 3 மணிக்கு
இராஜகுலராமன் போர்டு பாடசாலையில்
ஒரு தேக்கச்சேரி நடத்தி உபசாரப்பத்திர
மும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அவ்வ
மயம் பல பிர முகர்கள் விஜயஞ் செய்திருந்
தார்கள்.

ரா. கிஷ்ணசாமி.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு

ஈரோடு விபவ-ஞு கார்த்திகை-மீ 3-உ


## பாஞ்சால சிங்கம்.

நமது பத்திரிகை முடிந்து கடைசித்தாள் அச்சுக்குப் போகுந்தருவாயில் பாஞ்சாலசிங்கம் முடிசூடாமன்னர் உண்மைத் தலைவர் லாலாலஜபதிராய் அவர்கள் திடீரென்று மாரடைப்பு வியாதியால் மரணமடைந்தாரென்று தந்திகிடைத்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனோம். சுருக்கச்சொல்லவேண்டுமானால் இந்தியாவில் இருந்த-இருக்கிற-தலைவர்களில், லஜபதியவர்கள் சொல்லும் வார்த்தைக்குத் தப்புஎண்ணம் அவரது எதிரியாலும் கற்பிக்க முடியாத உத்தம வீரர் இவர் ஒருவர்தான் என்றே சொல்லவேண்டும். இவரது மரணத்தால், தனது மனதிற்குப் பட்டதை தைரியமாயும் ஒளிக்காமலும் வெளியிடக்கூடிய ஒரு ஒப்பற்ற தலைவர் இந்தியாவில் இல்லை என்று சொல்லும்படியான நிலைமை உண்டாகிவிட்டது. சுயராஜ்யக்கக்ஷியாரைப்பார்த்து "பஞ்சாப் மாகாணத்தில் உள்ள எல்லா தொகுதிகளில் வேண்டுமானாலும் நான் ஒருவனேதேர்தலுக்கு நிற்கின்றேன். யாராவதுவந்து என்னுடன் போட்டி போடுவதாயிருந்தால் வாருங்கள் ஒரு கை பார்க்கலாம்" என்று சொன்னவர். திரு மோதிலால் நேருவின் வாடையே பஞ்சாப் நாட்டிற்குள் அடிக்கவிடாமல் செய்த தனி வீரர்.

சமீபத்தில் தமிழ் நாட்டையும் மலையாளத்தையும் பார்த்துவிட்டுப் போனபிறகு தமிழ் நாட்டின் நிலையை பயப்படாமல் சிறிதும் ஒளிக்காமல் வெளியிட்டவர். தமது ஆயுள் காலமெல்லாம் தமது உடல்பொருள் ஆவி மூன்றையும் மக்களுக்கு என ஒதுக்கி வைத்து விட்ட உண்மைத்தியாகி-தேசத்துக்காக முதல் "சிறைத்தண்டனை"யின்போது 20 வருஷத்திற்கு முன் நாடு கடத்தப்பட்டவர். இரண்டாவது "சிறைத்தண்டனை"யின் போது 15 வருஷத்திற்கு முன் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரவிடாமல் தடைசெய்யப்பட்டவர்- ஒத்துழையாமையின் போது 2 வருடம் சிறை சென்றவர். 3 வது "சிறி

## தென்னிந்திய சீர்திருத்தக்காரர் மகாநாடு

தென்னிந்திய சமூகச் சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு இந்த மாதம் 26, 27 தேதிகளில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் சென்னையில் கூடப்போகிறது. இம்மகாநாடானது தென்னிந்திய சமூகத் தொண்டர் சபையாரால்கூட்டப்படுவதாகும். தென் இந்தியாவில் இருந்துவரும் சமூக ஊழல்களை நினைக்கும்போது இம்மாதிரி மகாநாடுகள் தினமும் கூட்டப்படவேண்டும் என்றும் சுயநலப்பிரியர்களாகமாத்திரம் இருக்கா செத்தால் போதும் என்ற கொள்கைக்கு அடிமையாகாத மனிதர்களும் கடுகளவு உண்மையான ஜீவகாருண்யமுடையவர்களும் தங்கள் வாழ்நாட்களை இதற்காகவே செலவிட வேண்டியது மனிதத் தன்மையில் முக்கியமானகடனென்றும் சொல்லுவோம்.

நிற்க சீர்திருத்தமகாநாடென்றுஒன்றைக் கூட்டிசிலர்மாத்திரம்முன்வணியில்நின்றுவெறும்வாய்ப்பந்தல் போட்டு வேஷத்தீர்மானங்கள்செய்துதங்கள்தங்கள் பெயரை விளம்பரஞ்செய்து தங்களை அன்னிபர்பெரிய தேசாபிமானி யென்றும் சமூக சீர்திருத்தக்காரன் என்றுசொல்லபெயர் பெற்றுக்கொண்டு காரியத்தில்வரும்போது மதத்தின் பேராலும் சாஸ்திரத்தின்பேராலும் சமயத்தின் பேராலும் மடத்தின் பேராலும் வருணாசிரமத்தின் பேராலும் சங்கராச்சாரிகளின் பேராலும் 'மடத்தில் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது" என்பதான திருட்டு தேசியத்தின் பேராலும் நாணயப்பொறுப்பில்லாமலும் போக்கிரித்தனமாகவும் கிளம்பி முட்டுக்கட்டை போடுவதும், வெளிக்கி யோக்கியர்கள்போல் காட்டிக்கொண்டு உள்ளுக்கு பணச்செலவு முதலியவைகள் செய்து தடங்கல் செய்யச்செய்வதும், லஞ்சமும் கூலியும் கொடுத்து ஆட்களைச் சேர்த்து தேசியத்தின் பேராலும் சமயத்தின் பேராலும் கூப்பாடுபோடச் செய்வதுமான காரியங்கள்நடந்து வருகின்றன. இக்கொள்கைகளுடனே தான் இதுவரை அநேக சீர்திருத்தமகாநாடுகள் கூட்டப்பட்டிருக்கின்றன,

உதாரணமாகச்சொல்லவேண்டுமென்றால் தென்னிந்தியாவில் சீர்திருத்தத் தலைவர்களுக்குள் மிகவும் சிறந்து விளங்குபவர்களில் திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்கார் சர். சி. பி. ராமசாமி அய்யர், எஸ். சத்தியமூர்த்தி, சி. ராஜகோபாலாச்சாரி, டாக்டர் எஸ் எஸ், ராஜன் முதலியோர்களான இவர்கள் பெரிதும் சீர்திருத்த ஸ்தாபனத் தலைவர்களும சீர்திருத்த மகாநாடுகளுக்குத் தலைமை வகித்தவர்களும் சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுமே ஆவார்

ருத்தம்" பரப்பிரவகரூநம ராககாரால் அநுபுப் பட்டவர்- அதாவது அநேகமே உயிர்விட நேர்க்கோ என்று எண்ணத்தக்க அளவு அடிபுபட்டவர்- இப்பேர்ப்பட்ட ஒப்பற்ற ஒரு மகா உண்மைத் தியாகி இறந்தது ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

கள். இவர்களின் சீர்திருத்த கொள்கைகள் எல்லாம் பிறர் எவரையும்தொட்டால்சீர்திருத்தக்காரர்கள் ஆகிவிடலாம் என்பதும், எதையும் சாப்பிட்டால் சீர்திருத்தக்காரர் ஆகிவிடலாம் என்பதும், யாருடனும் சுகித்தால்சீர்திருத்தக்காரர் ஆகிவிடலாம என்பதும், எங்கும்சாப்பிடுவதாக காட்டிக்கொண்டால் சீர்திருத்தக்கார்களாகிவிடலாம் என்பதுமான கொள்கைகள் என்றுதான் சொல்ல வேண்டுமொழிய மற்றபடி உண்மையான சீர்திருத்தக் கொள்கைகள் அமுலில் வருவதானால் தங்களால் கூடியவரை முட்டுக்கட்டை போடுகின்றவர்கள் என்றுதான் சொல்லி ஆகவேண்டும்.

உதாரணமாக சமூக சீர்திருத்த சங்கத்தலைவரும் சர் சங்கரன் நாயருடைய சிஷ்யர் என்று சொல்லிக்கொள்பவருமான திரு, சீனிவாசய்யங்கார் பொதுப்பணத்தில் நடந்ததும் பொது ஸ்தாபனமாக இருந்ததுமான குருகுலவிவகார சம்பந்தமான விஷயத்தில் பார்ப்பனனேதான் சமையல் செய்தாகவேண்டும் என்று சொன்னதும், பார்ப்பாரக் குழந்தை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்க்ககூடாது என்பதற்கு வக்காலத்து வாங்கிப் பேசினதும், பிரபலமும் பிரக்யாதியும் பெற்ற தேசியவாதியும் சமூக சீர்திருத்தக்காரரும் சீமை சென்று வந்தவரும் மற்றும் பல சீர்திருத்தப் பெருமைகள் படைத்தவருமான திரு சத்தியமூர்த்தி அய்யர்என்பவர்-கோவிலில் சுவாமிகள் பேரால் விபசாரத்திற்கு சிறு பெண்களுக்கு முத்திரை போடக்கூடாது (பொட்டுக் கட்டக்கூடாது)-என்பதையும் நகரத்தில விபசாரிகளின் தொல்லையை ஒழிக்கவேண்டும்—என்பதையும் முக்கியமாகக் கொண்டதான சட்டங்களை எதிர்த்ததும், அவ்விழி தொழில் காரிகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு எதிர்பிரசாரம் செய்ததுமே போதுமான சாட்சியாகும்.

மற்றும் தென்னாட்டு காந்திஎன்றும் காந்தியடிகளின் சிஷ்யர்களுக்கு சட்டாம்பிள்ளை என்றும் திரு. காந்திக்கு அடுத்த வாரசுதார் என்றும் சீர்திருத்தமே உருவாய் வந்தவர் என்றும் சொல்லப்பட்டு வந்தவரான திரு. ராஜகோபாலாச்சாரியாரும அவரது உற்ற நண்பரும் பின்பற்றுவோருமான திரு. திருச்சி டாக்டர் ராஜனும் தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில்-தேசிய சம்மந்தப்பட்ட வரையிலாவது மக்கள் பிறவியால் உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது-என்கின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் அக் கமிட்டியிலிருந்து ராஜீனாமாக் கொடுத்து விட்டதும், மற்றும் சில சமரச சன்மார்க்கிகளும் அவர்கள் போன்றவர்களும் இதற்கு விரோதமாய் ஓட்டுக்கொடுத்ததுமான காரியங்களை நாம் முன் குறிப்பிட்டவைகளுக்கு தக்க சான்றாகும். ஆனால் மேல்கண்டவர்கள் மேல்கண்ட விஷயத்தில் நடந்துகொண்டமாதிரிகள் தங்கள் பகுத்தறிவுக்கும்மனச்சாக்ஷிக்கும் சரி என்று பட்ட முறையில் அந்தப்படி நடந்துகொண்டிருந்திருப்பார்களானால் நாம் குற்றம் சொல்ல இடமிருக்

## ...ரசியரும் சத்தியமும்.

திரு சீனிவாசய்யங்கார் அவர்களை திரு லாலா லஜபதிராய் அவர்கள் 'பூரண சுயேச்சையே வேண்டுமென்று கேட்பவர்களான தாங்கள் ராஜபக்திப் பிரமாணம் செய்யலாமா' என்று கேட்டபொழுது அதற்கு பதில் திரு அய்யங்கார் தான் அந்தப்பிரமாணத்தை மனதில் வேறு ஒரு விஷயத்தை நினைத்துக் கொண்டு கபடமாக பிரமாணம் செய்தே

---

திருக்காது. ஆனால் தங்கள் தங்கள் சுய நலத்தையும் வகுப்பு நலத்தையும் முக்கியமாகக் கருதி நடந்தவர்கள் என்று சொல்லும்படியாகவே இவர்கள் நடந்துகொண்டார்கள் என்று தைரியமாய் சொல்லலாம்.

எனவே சமீபத்தில் சென்னையில் கூட்டப் போகும் சீர்திருத்தக்காரர்கள் மகாநாடும் சீர்திருத்த வேஷக்காரர் மகாநாடு போலல்லாமல் உண்மையான பலனைக்கொடுக்கும் உண்மையான மகாநாடாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவதுடன் தென் இந்தியாவின் நாலாபக்கங்களிலுமுள்ள உண்மைத்தொண்டர்கள் தவறாமல் வந்து தாராளமாய் கலந்து வேண்டிய உதவி செய்யக்கோருகின்றோம். அம்மகாநாட்டை நடத்தும் பொறுமையை மேற்போட்டுக்கொண்டிருக்கும் திரு- ஆரியா, திரு எம். கே. ரெட்டியார் மற்றும் சில நணபர்கள் ஆகியோர்கள் தாராள நோக்கமுடையவர்களும் இவ்வேலையில் உள்ளும் புறமும் ஒத்தவர்கள் என்பதும் நாம் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமல்ல. மற்றும் இம்மகாநாட்டுக்கு கொடியேற்றம் செய்யும் அம்மையார் திரு- தேவி கமலாக்ஷி பண்டலே அவர்கள் மிகவும் தாராள நோக்கமும் பரிசுத்த மனமும் கொண்டவர்கள். மகாநாட்டை திறந்து வைக்கும் சென்னை அரசாங்க மந்திரி கனம் திரு. S. முத்தையா முதலியாரவர்களும் சமூக சீர்திருத்த விஷயத்திலும் மக்கள் எல்லோருக்கும் சமசுதந்திரமும் சமசந்தர்ப்பமும் இருக்கவேண்டும் என்கிற விஷயத்திலும் உண்மையான கருத்தும் உழைப்பும் கொண்டவர். மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பவரைப் பற்றி நாம் ஒன்றும் இங்கு எழுதவரவில்லை அன்றியும் இவ்விஷயத்தில் எழுதவேண்டிய அவசியமும் இல்லை- ஆதலால் இம்மகாநாடானது தென இந்தியாவின் அவசியமான சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாகவும் அஸ்திவாரம் போடுவதாகவும் இருப்பதோடு நமது நாட்டின் நிலைமையும் தேவையையும் அறிவதற்கென்று அரசியலின் பேரால் சீமையிலிருந்துவரும் பார்லிமெண்ட் கமிட்டியாகிய சைமன் கமிஷனுக்கும் உண்மையான நிலைமையும் தெளிவையும் தெரிவிக்கக் கூடியதான ஒரு அறிக்கையாகவும் ஆகலாம் என்றும் நினைக்கின்றோம். நம்நாட்டு செல்வந்தர்களும் சீர்திருத்த அபிமானிகளும் இம்மகாநாடு விமரிசையாயும் செவ்வையாயும் நடைபெற தங்கள் தங்களால் கூடிய பொருளுதவியும் செய்யவேண்டுமென ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம்-

னே ஒழிய உண்மையாக செய்யவில்லை' என்று சொன்னாராம் இதை பச்சைதமிழில் சொல்வதானால் 'பொய்ச்சத்தியம் செய்தேனே ஒழிய உண்மையான சத்தியம் செய்யவில்லை' என்று சொன்னாராம். உடனே திரு. லாலாஜி 'அப்படியானால் மற்றபடி நீர் இப்போது என்னிடம் பேசியதாவது உண்மைதானா அல்லது இதிலும் ஏதாவது ஒன்றை மனதில் நினைத்துக் கொண்டு வேறு ஏதாவது வாயில் பேசுகிறீரா என்ன' வென்று கேட்டாராம் திரு. அய்யங்கார் வெட்கித் தலைகுனிந்து கொண்டாராம்.

நமது தென்னாட்டுப்பார்ப்பனர்களின் தலைவர்களானவரிடத்தில் சத்தியத்திலேயே இரண்டு விதம் அதாவது பொய் சத்தியம் நிசமான சத்தியம் என்பதான வித்தியாசங்கள் இருந்தால் இனி சாதாரணமாக அதாவது சத்தியம் என்று எண்ணாமல் பேசும் விஷயங்களில் எத்தனைவித வித்தியாசங்கள் இருக்கும் என்பதைக் கண்டு பிடிக்க வல்லவர்கள் யார் என்பது நமக்கு விளங்கவில்லை. ஆனபோதிலும் இந்த பொய் சத்திய முறை கூட தற்காலத்தில் அனேக கனவான்களுக்குமிகவும் யோக்கியமான முறை யென்றேற்பட்டு திரு அய்யங்காருக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுக்க முன் வந்திருக்கின்றார்கள்.

அதாவது திருவாளர்கள் சத்திய மூர்த்தியும் வரதராஜுலுவும் முறையே இந்தியாவின் அரசியலை நடத்த திரு சீனிவாசய்யங்காரே தக்க பெரியாரென்றும் இந்தியாவில் உள்ள 33 கோடி மக்களும் இந்த திரு சீனிவாசய்யங்காரையே நம்பி இருக்கின்றார்கள் என்றும் சொல்லி அய்யங்காரைகுஷால் படுத்தினார்கள். போதாக்குறைக்கு திருவாளர் சி ராஜகோபாலாச்சாரி என்கின்ற சத்திய கீர்த்தியும் 'திரு சீனிவாசய்யங்காரை விட்டால் சென்னை மாகாணத்தில் காங்கிரசை நிர்வகிக்க வேறு தக்கவர் கிடையாது' என்று பம்பாயில் சொன்னார். இவர்களை இப்படி சொல்லியிருக்க மற்றபடி இதே கூட்டத்தில் இருக்கும் திருவாளர்கள் குழந்தை குப்புசாமி அண்ணாமலை கந்தசாமி அமித்கான் முதலிய தலைவர்கள் சொல்லுவதைப் பற்றி நாம் இங்கு குறிப்பிட வேண்டுமா என்று கேட்கின்றோம்- எனவே அரசியல் என்பது எவ்வளவு அயோக்கியத்தனம் என்பதையும் எந்தவிதத்திலும் இந்த அரசியல் ஸ்தாபனங்கள் மானம் வெட்கம் ஒழுக்கம் நாணயம் முதலியவைகள் இல்லாதவர்களுக்கே சொந்தமாக இருக்கின்றது என்பதையும் பொது ஜனங்கள் உணருவதற்காகவே இதை எழுதுகின்றோமே யல்லாமல் மேற்கண்ட கனவான்களின் யோக்கியதையை பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக இதை எழுதவில்லை.

---

### திரு நாயக்கர்.

திரு நாயக்கர் இம்மாதம் நவம்பர் மாதம் 22-ம் நாள் பகல் வண்டிக்கு மதுரா ஜில்லா ஆண்டிப்பட்டிக்கு திருவாளர் ப. ராமசாமி நாடார் அவர்கள் புதல்வன் மாரிமுத்து அவர்களின் திருமணத்துக்குப் போய் விட்டு 23-ம் நாள் இரவே ஈரோட்டுக்குத் திரும்பி விடுவார்.

## 'குடி அரசு' புத்தக வெளியீடு.

'குடி அரசு' பத்திரிகையின் இந்த நான்கு வருஷத்திய மலர்களில் வெளியான முக்கிய கட்டுரைகளையெல்லாம் திரட்டி புத்தக ரூபமாயும் மற்றும் நமது கொள்கைக்கேற்ற வேறு பல புத்தகங்கள் எழுதியும் 'குடி அரசு' வெளியீடு என்கிற பெயருடன் சுமார் 100பக்கங்கள் கொண்ட புத்தகமாகவரிசையாய் வெளியிடவேண்டுமென்றும் அதற்காக ஒரு தனி ஸ்தானம் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பல நண்பர்கள் அபிப்பிராயப்பட்டு நமக்கு தெரிவித்திருக்கிறார்கள் அதை அனுசரித்து ஒரு ஸ்தாபனத்தை ஒரு சிறிய லிமிடெட் கம்பெனியாக கூட்டி அதன்மூலம் மேற்படி வெளியீடு பிரசுரம் செய்யலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, 10 ரூபாய் வீதமுள்ள 2000 பங்குகள் கொண்ட ஒரு லிமிடெட் கம்பெனி ரிஜிஸ்டர் செய்து வேலை துவக்கலாம் என்பதாகும். இந்தப்படியே ஒரு நண்பர் யோசனை கூறியிருக்கிறார். ஆகையால் அடுத்த மாதம் முதலில் இது கவனிக்கப்படும்.

---

## இராமாயணம் பாலகாண்டம்.

இதிகாசம் என்னும் தலைப்பின்கீழ் திரு சந்திரசேகர பாவலர் என்கிற பெயரால் நமது 'குடி அரசில்' வெளியாகிவந்த இராமாயண ஆராய்ச்சி, பாலகாண்டம் என்கிற 16 கட்டுரைகளை ஒரு புஸ்தக ரூபமாக அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. சுமார் 100 பக்கமுள்ள புஸ்தகம் விலை சுமார் அணா எட்டுக்குள் அடங்கும். வேண்டியவர்கள முன்னால் பணம் அனுப்பியோ அல்லது வி. பி. மூலம் அனுப்பும்படியாகவோ எழுதியோ பதிவு செய்துகொள்ள வேண்டுகின்றோம்.

---

## திரு. ராமலிங்கசுவாமி பாடல் 100,

ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளால் பாடப்பட்ட அருட்பா என்பதிலிருந்து திரு. சாமி சிதம்பரனார் அவர்களால், 'குடி அரசு' கொள்கைக்கேற்றதென்று கருதப்பட்ட 100 பாடல்களை திரட்டி ஒரு புத்தகமாக அச்சிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது- அதன் விலை 3 அணாவிற்குள் அடங்கும் வேண்டியவர்கள் தெரிவிக்கவேண்டுகிறோம்.

---

## முனிசிபல் வரவேற்பு உபசாரப் பத்திரம்.

அடுத்த மாதத்தில் திரு. கோவை ஆர். கே. ஷண்முகம் செட்டியார் M. L. A. அவர்களால் திறந்து வைக்கப்பட ஏற்பாடு செய்திருக்கும் சுயமரியாதைப் பிரசாரப் பள்ளிக்கூட திறப்புவிழாவிற்கு தலைமை வகிக்க வரும் சென்னை கார்ப்பரேஷன் தலைவர் திரு ஏ. ராமசாமி முதலியார் B. A. B. L. அவர்களுக்கு ஈரோடு முனிசிபாலிட்டியார் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதாக ஏகமனதாய் தீர்மானித்திருக்கிறார்கள்.

## லாலா லஜபதி.

திருவாளர், பஞசாப் லாலாலஜபதிராய் அவர்கள் தமிழ்நாட்டை வந்து நேரில் பார்த்துவிட்டு போனபிறகு சென்னை உலகம் என்று 'தியாகபூமி'யில்ஒருவியாசம் எழுதியதை சோழவந்தான் திரு. முனகால் பட்டாபிராமய்யர் அவர்கள் மொழிபெயர்த்து பிரசுரிக்க அனுப்பியிருந்ததைஎளிய நடையில்மற்றொருபக்கம்பிரசரித்திருக்கின்றோம் அதில்சென்னை அரசியலைப்பற்றியும்கோயில், குளம், புராணம், பண்டிதர்கள், தலைவர்கள் ஆகியவைகளின் யோக்கியதைகளைப் பற்றியும் நன்றாய் விளக்கியிருக்கிறார். எனவே வாசகர்கள் தயவுசெய்து பொறுமையுடன் ஷை விஷயம் முழுதையும் படித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

## கார்பொரேஷன் தலைவர்-

சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தேர்தலில் திரு வ. ராமசாமி முதலியார் அவர்கள் வெற்றி பெற்றார் என்ற சேதியைக் கேட்டு மகிழ்ச்சியடையாத உண்மைத் தமிழ்மக்கள் இந்நாட்டில் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றோம். தவிர இந்த முடிவானது சென்ற வருஷம் முதலே உறுதியாய் எதிர்பார்த்த முடிவாகும். மேலும் இந்த முடிவானது, சென்னை பார்ப்பனர்கள் தங்களுக்குள்ளாகவோ தங்கள் அடிமைகளுக்குள்ளாகவோ காங்கிரஸ் வேஷத்தாலோ தேசீய வேஷத்தாலோ யாரையும் நிறுத்த முடியாமல் போனதைப் பொருத்தவரையில் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பெரிய வெற்றியானாலும் ஜஸ்டிஸ் கட்சியில் கட்சிப் பிளவை உண்டாக்கும் வேலையில் கருப்பபார்ப்பனர்களும் வெள்ளைப்பார்ப்பனர்களும் ஒருவாறு வெற்றி பெற்று விட்டார்கள்என்றே சொல்லவேண்டும். திரு ராமசாமி முதலியாருக்குஏற்பட்ட வெற்றியின் சந்தோஷத்தைவிடஒரேகட்சியில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் வருந்தத்தக்கதேயாகும். என்றாலும் திரு ராமசாமி முதலியார் அவர்களை தலைவராகக் கொண்ட சென்னை கார்ப்பொரேஷனைநாம் பாராட்டாமலிருக்க முடியாது சென்னை கார்ப்பொரேஷனுக்கு இதுவரை இருந்த கெட்ட பெயரும் இழிவும் திருமுதலியார்காலத்தில் மாறி அதற்கு ஒரு கௌரவம் ஏற்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

## மூடர்களுக்கு இந்தியா மாத்திரந்தான் சொந்தமா ?

மேல்நாட்டில் கூட சிலர் சுவாமி என்றும் மோக்ஷம் என்றும் நரகம் என்றும்சூக்ஷம சரீரம் என்றும்சொல்லுகின்றார்களென்றும் ஆதலால்அவைகள்நிஜம் என்றும்ஒரு'சூக்ஷமசரீரக்காரர்' தனது பத்திரிகையில் எழுதுகிறார். நாம் அதற்கு ஒருபதில் தான் சொல்லக்கூடும்! அது,முட்டாள்களுக்கும்அயோக்கியர்களுக்கும்இந்தியாவும்சிறப்பாக தமிழ்நாடும்மாத்திரம் சொந்தமா ? என்பது தான்.

## கோவையில் சர்வ கக்ஷி மகாநாடு.

கோயமுத்தூரில் இம்மாதம் 23-ஆம் தேதி அகில இந்திய சர்வகக்ஷி மகாநாட்டு அரசியல் திட்டம் என்பதைப்பற்றி யோசிக்க ஒரு சர்வகக்ஷி மகாநாடு கூடப்போகின்றது. அதற்கு காரியதரிசி திரு. R. K. ஷண்முகம் செட்டியார் M. L. A. அவர்களாவார்கள் அதன் வரவேற்புத் தலைவர் திரு C S இரத்தினசபாபதி முதலியாரவர்கள் M. L. C. அவர்கள். மகாநாட்டு தலைவர் சென்னை திரு- சாமி வெங்கிடாசலம்செட்டியார் M, L. C. அவர்கள்-

எனவேமேல்கண்டமூன்று கனவான்களும் பார்ப்பனரல்லாதார் என்பதில் நாம் எவ்வித ஆக்ஷேபனையும் சொல்லமுடியாது- ஆனால் பார்ப்பனர்களுக்கும் பாமர ஓட்டர்களுக்கும் பயப்படாமல் தைரியமாய் தங்கள் சமூகத்திற்கும் தங்கள் நாட்டின் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூகத்திற்கும் உண்மையான யோக்கியமான பிரதிநிதிகளாய் இருந்து அவர்களின் கஷ்ட நஷ்டம் முதலிய கொடுமைகளை தைரியமாய் எடுத்துச்சொல்லி அதற்கு வேண்டியதை வலியுறுத்துவார்களா என்பவைகளை, மாத்திரம் மகாநாட்டின் நடைமுறைகளுக்குப்பின் முடிவுசெய்யவேண்டியிருக்கிறது என்றாலும் இன்னிலையில் அம்மூன்று கனவான்களையாவது உத்தேசித்து மகாநாட்டுக்கு எல்லோரும்போய் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை தாராளமாய்ச் சொல்வதற்கும் வலியுறுத்துவதற்கும் முடியாமல்போனாலும்கூட சாக்ஷியினராகவாவது சென்று அக்கனவான்களை கௌரவப்படுத்த வேண்டுகின்றோம்.

## இதற்கு என்ன வால் என்று பெயர்

திரு நேரு, திரு சீனிவாசய்யங்கார் ஆகிய இருவரையும் ஆதரிப்பவர்களுக்கு வெளவால் என்கின்ற பெயரானால், திரு நேருவும், திரு சீனிவாசய்யங்காரும், திரு பெசண்டம்மையும் ஆகிய மூவரை திருட்டுத்தனமாக ஆதரிப்பதற்கு என்ன வால் என்று சொல்லுவது?

## மருத்துவர் மாகாணநாட்டுக்கு எனது ஆலோசனை

இம்மகாநாடு கூடுவது நல்ல தருணமே. ஆகையால் சைமன் கமிஷனுக்கு அனுப்பும் யாதாஸ்தை இம்மகாநாட்டின் மூலமாக அனுப்ப இம்மகாநாட்டின்கமிட்டிக்கு ஷை யாதாஸ்தைக் கொண்டு வரவேண்டுமென்றும் வைத்தியர் மருந்து முதலியவைகளைப் பரீட்சித்து யோக்கியதாபத்திரம் பட்டம் முதலியவைகள் வழங்கப்படல் வேண்டுமென்றும் 'குடி அரசு' பத்திரிகை ஆசிரியர் திரு ஈ, வெ, ராமசாமி நாயக்கரவர்களை இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி அழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். எம் எஸ் சுப்பிரமணியம்

நெ. 8 தமிழ் வைத்தியசாலை
தெற்குவாசல், மதுரை.

## மதுரை வைக்கம் வீரர் வாசகசாலை.

'மதுரை வைக்கம் வீரர் வாசகசாலை'யை பற்றி 'ஞான சூரியன்' ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ சாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் அபிப்பிராயம்:—

இவ்வாசகசாலையின் தலைவர் திரு வி மு பொன்னையா அவர்கள் ஆவார். இவர்வாசகசாலையை மிகச்சிறந்தமுறையில் நடத்திவருகிறார்கள். வாசகசாலையின் சார்பாக ஓர் புத்தகசாலையும் திறப்பதற்கு முயற்சி செய்துவருவது பாராட்டத்தக்கது- ஏழை மக்களின்-முன்னேற்றத்திற்கு அவர்கள் எவ்வளவோ முயற்சி எடுத்திருக்கிறார்கள், ஆதலால் தேச நலம் நாடும் அன்பர்கள் யாவரும் இயன்ற உதவி புரிந்து ஷை வாசகசாலையை சீர்பெறச் செய்யவேண்டுகிறேன்,

(ஒ-ம்) சுவாமி சிவானந்த சரஸ்வதி,

## அநுதாபம்

வத்தாறுயிருப்பு நாடார்மகாஜன கிளைச் சங்கப் பிரசிடெண்டும் சுயமரியாதை வீரரும் யூனியன் போர்டு மெம்பரும் பிரபல வியாபாரியுமான உயர் திருவாளர் வே. மீ. வேலாயுத நாடார் அவர்கள் நாளது 27-10-28 தேதி மண்ணுலகை நீத்தார் என்பதை கேள்வியுற்று மிகவும் வருந்துகின்றோம்,

இப்பெரியார்தம் வாழ்நாட்களை சதாவும் தேச ஊழியமே பெரிதெனக் கொண்டு மக்கள் மூடபழக்க வழக்கங்களை ஒழித்துசுயமரியாதையுடன்வாழ வேண்டுமென உபதேசிப்பதிலும் சுயமரியாதைக் கொடியை நாட்டுவதிலும்செலவிட்டவர் இப்பெரியாரின் குடும்பத்தினர்களுக்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எ எஸ் பி சாமி, உசிலம்பட்டி.

## விஸ்வகர்ம சங்கம்

நாளது 1928-ம் ஹூ அக்டோபர் மீ 27, 28தேதிகளில் ஷை சங்கத்தின் திறப்புவிழா கோலாலம்பூர் கொம்பாக்லேன் 13 ம் நம்பர் கிருகத்தில் நடத்தப்பட்டது. உள்ளூரிலும் வெளியூர்களிலுமிருந்து அநேக விஸ்வகர்ம குலமக்கள் விஜயம் செய்து கொண்டாட்டத்தைச் சிறப்பித்தனர். திருவாளர்கள். வயித்தியலிங்கப் பத்தர் அவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீலஸ்ரீ ஜி. சற்குணமாச்சாரியார் அவர்களால 27-10-28 மாலை6மணி முதல் 9மணி வரைக்கும் "விஸ்வ குல முன்னேற்றம்" என்னும் விஷயமும் 28-10-28 மாலை 6 மணி முதல் 9 மணி வரைக்கும் "விஸ்வகுல முன்னேற்றம்" என்னும் விஷயமும் 28--10—28 மாலை 6 மணி முதல் 9 மணி வரைக்கும் "ஆயுதமகிமை" என்னும் விஷயமும்மிகவும் இனிமையான மொழிகளால் உபந்யசிக்கப்பட்டது.

கே. வி. விஸ்வலிங்காச்சாரி, காரியதரிசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிடம் 'எங்களையும் கூட விரட்டி விடுவீர்களோ, என்று கேட்டார்கள். அதற்குநான் 'எங்களுடைய நோக்கம், ஜாதிப்பைசாசம் தொலையவேண்டும், பிறப்பால்உயர்வு தாழ்வு தொலையவேண்டும் அதற்கு ஆதாரமாய் இருக்கும் வேதம் புராணம் முதலியவைகளையும் பழைய மூட பழக்கவழக்கங்களையும் அடியோடு தொலைப்பதேயாகும் அதற்கு நீங்கள் தடையாய்ஏற்படுவீர்களானால்உங்களையும் விரட்டிவிடுவோம், என்று சொன்னேன். சகோதரர்களே! உலகத்தில் பிறந்தவெவ்வொருவரும் சகோதரரே என்றநோக்கம் என்று வருமோ அன்றே நம்நாடு விடுதலை அடையும் இப்பொழுது இந்த விழாவை நடத்திக் கொடுப்பதற்காக விஜயம் செய்திருக்கும் திரு. நாடார் அவர்களை நீங்கள் எல்லோரும் இப்பொழுது அறிவீர்கள். அவர்கள் இன்றைக்கு வருடத்திற்கு 1 லக்ஷத்திற்கு மேல் வரும்படியுள்ளவர்கள். படிப்பிலேபோதிய வல்லமை யுள்ளவர்கள். ஆறுவருட காலமாக சென்னை சட்டசபையில் அங்கத்தினராக இருந்து பொது மக்களுக்கு ஊழியஞ் செய்திருக்கிறார்கள். ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு தலைவராக கவர்மெண்டாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்பேர்பட்ட பெரியாரைமதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களில் உள்சென்று கடவுளை வணங்க முடியாதபடி செய்து வைத்திருப்பார்களே. யானால் நம்முடையநாடு எவ்வளவு கேவலமானது என்று நீங்களே யோசித்துப்பாருங்கள். அதற்காகவே அப்பெரியாரைக் கொண்டே 'ரிவோல்ட்' திறப்புவிழாவை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க எவ்வளவோ சிரமத்துக்கு இடையில் இவ்விடம்வந்து சிறப்புவித்துக் கொடுத்ததற்காக இச்சபையோரின் சார்பாக நான் இம்மாலையைச்சூட்டுகிறேன்" என்று ஒரு விலை உயர்ந்த சரிகை மாலையைச் சூடினார்கள்.

வந்தனோப சாரம்

பின்னும் "நமது முதலியார் அவர்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமையில் நீங்கள் இல்லை. அவர்கள் நீண்டகாலமாக ஸ்தல ஸ்தாபனத்தை நடத்திவரும் ஒரு ஆற்றலை போதிய சான்றாகும். அத்துடன் அவர்கள் இப்பக்கங்களில் ஒரு பீஸ்மேக்கர் (சமாதானம் செய்து வைப்பவராக) விளங்குகிறார்- அவர்கள், அவர்களுடைய அலுவல்களை விட்டு இங்குவந்து தலைமை பூண்டு நடத்திக் கொடுத்ததற்காக உங்களின் சார்பாக இம்மாலை இடுகிறேன்" என்று ஒரு அழகு நூல் மாலை இட்டார்கள் பின் நகர சபையாருக்கும் வெளி யிடத்திலிருந்து வந்திருப்பவர்களுக்கும் ஸ்கவுட்களுக்கும் வந்திருக்கும் பிரபலஸ்தர்களுக்கும்வந்தனோபசாரம் சொல்லி அமர்ந்தார்கள் பின்னர்

திரு தண்டபாணி பிள்ளை அவர்கள்

ஜனங்களின் சார்பாக 'ரிவோல்ட்டை' வரவேற்பதாகவும் அதை வெளியிட்டதற்காக அதன் ஸ்தாபகருக்கும் ஆசிரியருக்கும் நன்றிசெலுத்துவதாகவும் சொன்னார் பின்னர்

---

# "ரிவோல்ட்"

R E V O L T

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஓர் ஆங்கிலப்பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4.
மாணவர்களுக்கு ரூ. 3.
வெளி நாட்டுக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்
S. இராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—

மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T

---

## மதிப்புரைகள்.

சீனவேதம் அல்லது சகத்தின் சூட்சமம்:-

இது திரு. எம், ஆர். ஜம்புநாதன் அவர்களால் எழுதப்பெற்றதாகும்- இதில் சீன தேசத்துப் பெரியாராகிய கன்பூஷஸ் அவர்களின் கொள்கைகள் காணப்படுகின்றன. முகவுரையில் அவருடைய வாழ்க்கைவரலாறும் குறிக்கப்பட்டிருக்கின்றது. நமது நாட்டில் புத்தர் எத்தகைய அறவுரைகளை மக்களுக்குக் கூறி நல்வழிப்படுத்தினாரோ அவ்வாறே கனபூஷனும், சீனதேயத்தில் தொண்டு செய்தவர். இவரும் புத்தரைப்போலவே அறியவும் உறுதிகொள்ளவும்முடியாத பொருளாகிய கடவுள் என்பதைப்பற்றி "அறிய முடியாத பொருள் அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம்" என்றே கூறியுள்ளார். இவர் கூறியுள்ள அறவுரைகள் அனைத்தும் இக்காலத்தினர் உணரவேண்டியதே யாகும். இப்புத்தகத்தின் விலை அணு 12.

திரிமூர்த்திகளின் உண்மை அல்லது தேவர்களின் இரகசியம்.

இதுவும் திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்களாலேயே எழுதப்பட்டது. இதில் மும்மூர்த்திகளென்று சொல்லப் படுகின்ற பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மூன்று தேவர்களைப்பற்றிப் ஆராய்ச்சி கூறப்படுகின்றது. புராணங்களிற் கூறும் கூற்றுக்கள் உண்மையல்ல என்று மறுத்து, காற்றை பிர்ம்மாவென்றும், சூரியனை விஷ்ணுவென்றும், அதனையே உருத்திரனென்றும கூறப்படுகின்றது. இவற்றிற்கு வேதங்கள் என்பவைகளிருந்தே ஆதாரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே இவ்வாராய்ச்சி நூலை இப்பொழுது மும்மூர்த்திகளென்ற பெயரை வைத்துக்கொண்டு அதற்காக சமயங்களை வகுத்துக்கொண்டு அம் மும்மூர்த்திகளுக்குப் பெண்பிள்ளைகளையும் ஏற்படுத்தி கோயில்களும் கட்டிச் சிலைகளும் செய்து வைத்து பூசை, உற்சவம் முதலியவைகள் மூலம் தேசத்தின் பொருளை வீணாகச் செலவு செய்யும் மூட வழக்கத்தைக் கண்டிப்பதற்குத் தக்க ஆதாரமாகக் கொள்ளலாம். மும்மூர்த்திகளென்று கூறப்படுவது பொய்யென்பதையும், இயற்கைப் பொருள்களையே முன்னோர்கள் இவ்வாறு எண்ணினார்களென்பதையும் இதனால் நன்கறியலாம். இப்புத்தகம் விலை ரூ. 1—0—0

மேல்கண்ட இருபுத்தகங்களையும், சென்னை ரூடன் கம்பெனியார் வெளியிட்டிருக்கின்றனர். புத்தகங்கள் நல்லபையிண்டுடன் அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர் இரு புத்தகங்களையும் கீழ்கண்ட விலாசத்திற்பெறலாம்-

ரூடன் அண்டு கோ, வேதிக் புக்ஷாப்,
14 பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை, சென்னை.

---

"விடுதலை" என்ற தமிழ்வாரப்பத்திரிகையொன்று வரப்பெற்றோம். இது மதுரையிலிருந்து வெளிவருவது திரு. பி, சுப்ரமண்யம் அவர்களை ஆசிரியராகக் கொண்டது. இதன் கொள்கை, பார்பனரல்லாதாரைத் தூற்றுவதும் பார்ப்பனரைப் போற்றுவதுமாகும். வருடசந்தா ரூ 4—

விலாசம்:—

மானேஜர், "விடுதலை" பத்திரிகாலயம்,
மதுரை.

"மருத்துவன்" இப்பெயர் கொண்ட வைத்திய மாதப்பத்திரிகை ஒன்று வரப்பெற்றோம். இப்பத்திரிகை, வைத்தியத்துறையில் பன்னெடுங்காலமாகப் பாண்டித்யம் பெற்ற பரம்பரையைச்சார்ந்தவரான திரு பண்டிதர் எஸ், எஸ், ஆனந்தம் அவர்களின் தலைமையில் நடைபெறுவதாகும்; அவரே இப்பத்திரிகையின் ஆசிரியருமாவார். பண்டிதரவர்கள் பல்லாண்டுகளாகதமிழ் (சித்த

---

கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 9-மணிக்கு கூட்டம் ஆரவாரத்துடன் கலைந்தது- திரு- நாடாரவர்கள்மதுரைக்கும், திரு கண்ணப்பரவர்கள் சென்னைக்கும், திரு- சத்தினசபாபதி முதலியார் அவர்கள் கோவைக்கும் பிரயாணமானார்கள்.

ஒரு நிருபர்-

## நாடார் மகாஜன சங்கம், பட்டிவீரன்பட்டி.

நமது சங்க கவுன்சில்மீட்டிங்கு 1928௵ நவம்பர் மாதம் 23 ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6–30 மணிக்கு பட்டிவீரன்பட்டியில் நடைபெறும்.

ஆலோசிக்கப்பெறும் விஷயங்களாவன:-

1. செப்டம்பர் மாதம் 30 ந் தேதியோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும் வரவு செலவுகணக்குகளையும்பற்றிய ரிபோர்டைக்கவனித்தல்,

2-ஏழை மாணவர் காலர்ஷிப் 2 வது லாட்டரியின் பிரசாரத்திற்காக மோட்டார் கார் ஒன்று வாங்கும் விஷயம்.-

3- காரியதரிசிகளால் கொண்டுவரப்படும் இதர விஷயங்கள்.

4- சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்கள் கொண்டு வரும்தீர்மானங்களைக் கவனித்தல்-

சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கும்விடையளிக்கப் பெறும்- அங்கத்தினர் யாவரும் விஜயம்செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்,

பெரிதம்பி நாடார்-
சௌ. பாண்டியநாடார்-
காரியதரிசிகள்

---

ஆயுர்வேத, யூனானி, ஆங்கில முதலியவைத்தியமுறைகளில் அனுபவம் மிகுதியும் பெற்று விளங்குபவராவர், தமிழ்நாட்டுப் பழைய வைத்தியமுறையை மீண்டும் நிலைபெறச் செய்து வரும் வகையில் சுமார் பனிரெண்டு ஆண்டுகளாகப்பாடுபட்டு சித்த வைத்தியத்தை அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு அதனை ஆதரிக்கும்படி. செய்தவராவர், இப்பண்டிதர் "மருத்துவன்" என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராகவும், அதிபதிராகவுமிருந்து நடத்த முன்வந்தமை தமிழ் வைத்தியம் இனித் தலைதூக்கு மென்பதற்கு அறிகுறியாகும். "மருத்துவன்" பத்திரிகையில் அரிய பெரிய விஷயங்கள் பல காணக்கிடக்கின்றன, பாலர் பரிபாலனம், உணவும்உடல் வலிவும், அயம் அல்லது இரும்பு முதலிய தலையங்கங்களோடு கூடிய விஷயங்கள் பொன்னே போல்போற்றற்குரியனவாகும், இவற்றில் பாலர் பரிபாலனம் என்னும் விஷயத்தை முக்கியமாய் நமது நாட்டார் அனைவரும் படித்தறிய வேண்டும்- குழந்தைகளை ஒழுங்காகப் போற்றி வளர்த்து பெரியவர்களாக்க விரும்புவோர் ஒவ்வொருவரும் பாலர் பரிபாலனத்தைத் படித்தல் நலம், வைத்திய ஞானம் பெற்று, தங்களுக்கும் பிறருக்கும் நோயணுகாமலிருப்பதற்கும், வந்த நோயை போக்கிக் கொள்ள இஷ்டப்படுவோருக்கும் "மருத்துவன்" சிறந்த துணைவன் எனவே சொல்லலாம். இத்தகைய அரிய பத்திரிகையின் வருஷ சந்தா ரூபா மூன்றுதான். இப்பத்திரிகைக்கு சந்தாதாரராக சேர விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுத வேண்டும்,

'மருத்துவன்' காரியாலயம்,
221 தங்கசாலைத் தெரு, சென்னை,

---

## எங்கள் திக்கற்ற சமூகத்தை கை தூக்கி விடுபவர்கள் யார்.

### திருமணமாகாத் திக்கற்ற வாலிபன் எழுதுவது.

இப்பாரத உலகத்தே மக்களாகப் பிறந்த நம்மனோர் பலர் இன்று எந்நிலையிலிருந்து வருகிறார்கள்? எண்ணத் தொலையாத பல்லாயிரக்கணக்கானஜாதிகளாகப் பிரிந்து துன்புறுகிறார்கள், பல் வேறு ஜாதிகளாகப் பிரிந்த ஒவ்வொருவரும் தத்தமக்குள் தற்பெருமை கொண்டு வானமளாவப்புகழுரை பேசித்திரிகின்றார்கள்.

இவர்கள் பிரிவுற்று பேசும் புகழுரைகள் இன்று சீர்திருத்தக்காரர்களால் நசுக்கப்பெற்று தூள் தூளாய் போகிறது.

ஜாதியை சமயத்தைசாத்திரத்தை கோத்திரத்தை பரம்பரை பாத்தியத்தைக்கூறி பாமரமக்களை ஏமாற்றி வந்த காலம் மலை ஏறிப்போய்விட்டது.

இந்த நிலையில் ஓர் சமூகம் வானுகுடியிலும் பூவாணூரிலும் உறையூரிலுமாக வெள்ளாஞ்செட்டி ஜாதி என்ற பெயரால் நூறு குடிகளுக்குப் குறையாமல் இருந்து கொண்டு பழமைபழைமைஎன்றுபாமா விலங்குகளாக கிணற்றுத்தவளைகளாக இருந்துகொண்டு கல்யாண மென்றால் நாலாயிரத்திற்குக் குறையாமல் ரூபாயை செலவிடுவதும் யானைமேலேறி பவனி வருவதும் ஐம்பது மூட்டை அரிசியை வடித்து வயிறு வெடிக்கத் தின்பதும் பட்டப்பகலில் விளக்கைப்பிடித்துக்கொண்டு ஊர் சுற்றுவதும் தலை நிறைய துணியைச் சுற்றிக்கொள்வதும் போன்ற இன்னோரன்னபலமூடபழக்கவழக்கங்களைப் பின்பற்றி பார்ப்பனர் காலில் விழுந்து பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று மேற் சொல்லிய பழக்கவழக்கக் குருட்டு பிடிவாதத்தால், ஜாதி செருக்கால், சமய உயர்வால், பிறந்த ஊர்ப்பெருமையால் முதிர்ந்த நரைமயிர் வெளுத்த மூதாதை கண்ட வழி, அடிச்சுவடு என்று வீரம் பேசி தக்க வயதடைந்த வாலிபர்களை தகைந்து வருகிறார்கள். வாலிபர்கள் படுந்துன்பமோ சொல்லக்கூடியதல்ல; பொதுவாகக் கூறுமிடத்து திக்கற்ற சமூக வாலிபர்கள் என்று கூறுவது மிகையாகாது.

பணம் படைத்தவருக்கே பணக்கலியாணம், பழக்க வழக்கத்திற்கே பதட்டுக்கலியாணம் முதாதைகளின மூட வழக்கத்தை பின் பற்றுபவர்களுக்கே முகூர்த்தக்கல்யாணம்.

இஃதென்னகொடுமை! ஆ! திக்கற்ற வாலிபர்களே, வீர உணர்வுகொண்டு எழுங்கள் உங்கள் மனதில் தோன்றும் கவலையை ஒழியுங்கள்! சீர்திருத்த உலகம் நம்மைச் சீர்திருத்தும், சீர்திருத்த திருமணததால் சீர்திருத்தலாம். இத்தருணம் நம்மை கைதூக்கி விடுபவர்கள் சீர்திருத்தக்காரர்களேயல்லாது வேறு யார்.

---

## மூன்றுவது ஏகாதிபத்ய சித்திரப் பொருட்காட்சி,

சென்னை சர்க்கார் சட்ட இலாகாஅறிக்கை

மேற்படி "பொருட்காட்சி வைபவம்" 1929 ஆம் வருடம் எப்ரல், மே, ஜூன் மாதங்களில் லண்டன்மா நகரில் ஏகாதிபத்ய பொருட்காட்சி நிலயத்தில்நடைபெறும்- அதன் முக்கிய நோக்கம் என்னவெனில், ஏகாதிபத்தியத்திலுள்ள நிபுணர்களையும் அவர்களின் வேலைத்திறத்தையும் இங்கிலாந்திலுள்ள அபிமானிகளுக்கு அறிமுகப்படுத்துவதேயாகும்-

டி காட்சிக்கு அனுப்பப்படவேண்டியசித்திரப் பொருள்களை இந்தியகவர்மெண்டாரால் நியமிக்கப்படும் ஒருகமிட்டியார் தெரிந்தெடுப்பார்கள்- அவர்கள் தெரிந்தெடுத்த காட்சிப் பொருள்களை லண்டனுக்கு அனுப்பவும் அங்கிருந்து டெல்லிக்கு வரவழைக்கவும் ஏற்படும் செலவுகளை இந்தியகவர்மெண்டாரே ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் காட்சிப் பொருள்களை டில்லிக்கு அனுப்பி அங்கிருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டியதில் ஏற்படும்செலவுகளைகாட்சிப் பொருள்களின் சொந்தக் காரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்- மற்ற விபரங்கள் அறிய விரும்புவோர் "சென்னை கவர்மெண்ட் காரியதரிசி, சட்ட இலாகா, செனட்ஜார்ஜ்கோட்டை, சென்னை" என்ற விலாசத்துக்கு எழுதிக் கொள்ள வேண்டும்-

ஜே. வெங்கட்ட நாராயணா-
கவர்மெண்ட் காரியதரிசி-

---

## 1929 ஆம் வருட காலண்டர்,

இரங்கூன் நவநீத புத்தக சாலையார் அன்புகூர்ந்தனுப்பிய ஒரு பெரிய காலண்டர் வரப்பெற்றோம்- டி காலண்டர் மாதம் ஒன்றுக்கு ஒருதாளாகப் பன்னிரண்டு தாள்களும் தமிழ் இங்கிலீஷ் இந்துஸ்தானி வருட மாத தேதிகளும் ஒவ்வொரு தாளிலும் ஒவ்வொரு முஸ்லீம் க்ஷேத்திரப் படங்களும் கொண்டதாய் மூன்று கலர்களில் மிக அழகாய் இருக்கின்றது புத்தகசாலையாருக்கு எமது வந்தனம்

---


## கோட்டாறு நெசவு தொழிற்சாலை.

நவீன நாகரீக செயற்கைப்பட்டு

செயற்கைப் பட்டில் பலமாதிரி கலர்களில், கரைகளில் சேலை, தினுசுகளும் வேஷ்டி தினுசுகளும் தயாரித்து ஸ்டாக்காய் கைவசமிருக்கிறது- தேவைபோல நீளம் அகலம் கூடுதலாகவும் குறைவாகவும் தயாரித்து ஆர்டர்பிரகாரம் வி- பி-யில் அனுப்பப்படும்- மற்ற விவரத்திற்கு லெட்டரிலோ முகதாவிலோ கீழ்க்கண்ட விலாசத்திற்கு தெரிவித்துக் கொள்ளவும

பி- என், எஸ்.
ஆர்டிபிஷியல் வீவிங் பேக்டரி,
வாகையடிவீதி, கோட்டார்,
எஸ், திருவாங்கூர்.

## திரு. சௌந்திரபாண்டிய நாடாருக்கு வாழ்த்து.

திருப்பத்தூர் யூனியன் போர்டார், நவம்பர் மீ 6 வ ஒரு விசேஷ கூட்டம் கூட்டி பட்டிவீரன்பட்டி திருவாளர் சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை ராமநாதபுரம் ஜில்லா போர்டுக்குத் தலைவராக நியமித்ததற்காக சென்னை மாகாண கவர்னர் துரை அவர்களுக்கும், மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கும் நன்றி செலுத்துவதாகவும், திரு நாடார் அவர்களை வாழ்த்துவதாகவும் அவர் திருப்பத்தூருக்கு விஜயம் செய்யும்போது ஒரு வரவேற்புப் பத்திரம் அளிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் ஒரு தீர்மானம் ஏகமனதாய்ச் செய்தனர்.

ஒரு நிருபர்,

மேலார். தன்னுயிர்போல மன்னுயிர்காக்குந் தயாளகுணமுடையவர் வானவர் கொண்டாடும் வள்ளலாய் வந்தவர், எவ்வேளையிலும் சத்திய வாக்குடையவர், பெருங் கொடை வருணனைப்பேணி நடப்பவர், நன்மை நூற்கண்டறிந் களத்திலுண்டவர், சொன்ன சொல் மறவாச் சுத்த மெய்ஞானியர், பஞ்சைகளாதாரப் பதியதாய் வந்தவர், வைக்கம் வீரர்க்கொரு மகத்துவ சிநேகிதர், தக்கவர் போற்றும் முகவிப தாதார், சுயமரியாதைத் தோன்றலாய் வந்தவர், அகிலசுகவகமன்பினிற்கொண்டவர், பிறப்பினி லுயர்வுதாழ்வு பேதங்களற்றவர், கனவிலுஞ் சிறுதனை அண்டமாய் நினைப்பவர், நன்மையின் தொண்டர்கள் நன்றியறிந்தவர், ஏழைகளிடத்து மியல்நடையாளர், பெருங்கடலுலகிற் பெருநிதியுடையவர், வேள் [illegible] கீர்த்தி யடைந்தவர், சத்திய கொள்கையை தளராதாற்றுவர், அருங்கலை தெளிந்தறிந்தவன யில் வந்தவர், பஞ்சமப் பார்ப்பனர் பகட்டெலாங் கண்டவர், அஞ்சா நெஞ்சசாந்தருந் தகைபாளர். முதன் மந்திரியவர்களால் முதன்முறை பெற்றவர், உலகாவதாரமாய் உற்பவர், ஏழை பங்காளர் நம் இராமநாதபுரஞ் ஜில்லா போர்டு இன்றையத் தலைவர் ஸ்ரீமான் சௌந்திரபாண்டிய நாடார்.

துங்கன் சொக்கன்ணடித்தேவர்

நிலக்கோட்டை சென்னை சட்டசபை அங்கத்தினரும் நாடார் மகாஜன சங்கம் காரியதரிசியுமான ஸ்ரீமான் W P A சௌந்தரபாண்டிய நாடார் அவர்களை இராமநாதபுரம் டிஸ்டிரிக்ட்போர்டு பிரசிடெண்டாக நியமித்ததற்காக நாடார் மகாஜனங்கள் சார்பாக திருவாளர்கள் மு. சி. பெருமாள் நாடார், ம. ச. பி. பெ சிதம்பரநாடார், ப. வ. பழனிச்சாமி நாடார், ஒ. ச. முனியாண்டி நாடார், கூ. அ. காளியப்ப நாடார், வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர்களாக இருந்து 30-10-28 ல் திரு நாடார் அவர்களுக்கு சிறந்த ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். அதில் மகாஜனங்கள் தங்களுக்கு சுதந்தரமும் சுயமரியாதையும் கிடைக்க உதவிபுரியவேண்டுமென்றும் தீண்டாமையை ஒழிப்பதிலும் ஜலக்கஷ்டத்தைப் போக்குவதிலும் உடனே [illegible] [illegible] அவர்கள் [illegible]

கூத்தூர் நாளது 7—11—28-வ பிற்பகல் 5-மணிக்கு உடுமலைப்பேட்டை தாலுக்கா கூத்தூர் வெஸ்லியன் மிஷன் காம்பவுண்டில் ஆதி திராவிட சங்கத்தின் பிரசிடெண்டான ஸ்ரீமான் ஏப்ரகாம்ஐசெக் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அடுத்த கிராமங்களிலுள்ள ஆதி திராவிட சகோதரர்களும் இதர கனவான்களும் சுமார் முன்னூறு பேர் கூடியிருந்தனர். சபா நாயகர், ஸ்ரீமான் டப்ள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களுக்கு ராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் பதவி கிடைத்திருக்கிற தென் [illegible] விளைவிக்க அவர் அவ் [illegible] ரு மிக்காருமான அந்தஸ் [illegible] றம் அப்படி அவருக்கு [illegible] [illegible]

பழனியில் 4—8—28 ல் நடைபெற்ற ஆதி திராவிட மஹாநாட்டிற்கு ஸ்ரீமான் நாடார் அவர்கள் தமது சொந்த செலவில் விஜயம் செய்து ஏழைகள் பேரில் தமக்குள்ள அனுதாபத்தைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டினதற்கும் மேற்படி பதவியை நமது நாடார் அவர்களுக்கு அளித்த கவர்ன்மெண்டாருக்கு நன்றி செலுத்துவதும், நம்முடைய சந்தோஷத்தை ஸ்ரீமான் நாடார் அவர்களுக்கு அறிவிப்பது நமது கடமையென்றும் பேசினார். ஸ்ரீமான் நாடார் அவர்களுக்குத் தந்தி அனுப்பப்பட தீர்மானிக்கப்பட்டது. கரகோஷ [illegible] முழக்கின, ஸ்ரீமான் நாடார் அவர்கள் சகல சம்பத்துடன் நீடுழி வாழ வேண்டுமென்று வணங்கிய பின் சர்க்கரை தாம்பூலம் வினியோகிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

தே. ரா. கண்ணப்பன்.


### மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

[illegible] சாப்பிட்டுவந்தால் அதிக ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், முதலியன தீரும், நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும், குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் ஊக்கப் பெருந்துமுறுக்கேறி [illegible] மறுத்தும் பலப்படும், தம்பனசக்தியுண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2-8-0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆனந்தநிலயம், திருச்சங்கோடு, S. I.

ஏ. கே. டி. ராமய்யர் கம்பெனி,




149 பிராட்வே, சென்னை.




இருபதாம் நூற்றாண்டின் இணையிலா விநோதம்!

மாரிடமனி தர்மாமிடர்

அல்லது

மனோநிலை தர்மாமிடர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த தர்மாமிடரால் எந்த ஆணுடைய அல்லது பெண்ணுடைய மனோ நிலைமையை உடனே கண்டுபிடித்துவிடலாம். ஒருவர் கோபமாயிருக்கிறாரா அல்லது சந்தோஷமாயிருக்கிறாரா, அல்லது திருப்தியுடனிருக்கிறாரா, காதலிக்கிறாரா இல்லையா, எதுவாயிருந்தாலும் இதன் உதவியால் கண்டுகொள்ள முடியும். சிறப்பாக காதலர்களுக்கு இது நல்ல பயன்படும். இக்கருவி இந்தியாவுக்கே புதிதாகும்.

விலை ரூபாய் 1—4—0

ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு தர்மாமிடர்கள் தருவிப்போருக்கு தபால்செலவில்லை. இந்தியா, பர்மா, சிலோன், தவிர மற்றெந்த நாட்டாரும் தபால் செலவுடன் முன்பணம் அனுப்பவேண்டும். உடனே எழுதுங்கள்

தி கிருஷ்ணா ஏஜன்ஸி, தபால் பெட்டி 119, மதராஸ்.

### காலஞ்சென்றார்

விராட்டிபத்து வாசியும் மதுரை முனிசிபல் பள்ளிக்கூட உபாத்தியாயரும் "குடி அரசு" சந்தாதாரருமாகிய உயர்திரு சோ. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் சென்ற 2-11-28 வெள்ளிக்கிழமை இரவு சுமார் 8மணிக்கு காலம் சென்றார். இவர் தூய சுயமரியாதைக் கொள்கையுடையவ ரென்பது குறிப்பிடத்தக்கது. மறுதினம் மதுரையிலிருந்து அநேக உபாத்தியாயர்களும் விஜயம்செய்திருந்தார்கள். அவர் குடும்பத்தாருக்கும் அவர் அன்பர்களுக்கும் எனது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மு. பாலசுப்பிரமணியன்

### பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்

திருநெல்வேலி ஜங்கஷன் டி. பி. முத்துவேல் அன்கோ, புரோப்ரைட்டர் திருவாளர் எம். சோமசுந்தரம் பிள்ளைக்கும், அம்பாசமுத்திரம் தாலூகா ஆழ்வார் குறிச்சி கிராமத்திலிருக்குங்கர்ணம் ஸ்ரீ R. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் செல்வி ராமலெக்ஷிமி அம்மாளுக்கும் நிகழும் ஐப்பசிமாதம் 12 தேதி பார்ப்பனரை ஒழித்து திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.


## விலாசம் தேவை.

வாழ்க்கையின்பம், காதற் பெருக்கு, பரவசமுதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், "ரகஸ்ய ரத்னம்" என்ற புத்தகத்தை இனமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற்பெட்டி 222,
மதராஸ்.

## திருப்பூர் பனியன்ஸ்.

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

## மதனுகமம்.

(புதுச்சேரி பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்த தென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ 1—0—0.

வஸந்த நிலயம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.

## ஓவர்லண்டு.

### (4-91 புதுமாடல்) மோட்டார்கார் விற்பனை.

புது விலை ரூ. 4000. உத்தேச விற்பனை விலை ரூ. 1000,

என். தண்டபாணி கம்பெனிக்குச் சொந்தமான டி. எம். சி. நெ. 7188 உள்ள ஓவர்லண்டு காரை நாம் விற்றுவிட்டு வேறு புதிய காரை வாங்க முடிவு செய்திருப்பதால் நவம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் சுமார் ரூ 1000-க்குள்ளாக யார் உயர்ந்த விலை கொடுக்க முன் வருகிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கத் தயாராய் இருக்கின்றோம்.

கார் கெம்பீரமான பார்வையுடன் பெயிண்ட், சீட், டாப், எல்லாம் புதியதாகவே காணப்படுகின்றன. நிக்கல் ரேடியேட்டர், பாஷ் மாக்னிட்டோ, 4- சிலிண்டர் செல்ப் ஸ்டார்ட்டர், 20 குதிரை பவர் உள்ள உயர்ந்த எஞ்சின், 2 எலெக்ட்ரிக் ஹெட் லைட்டுகள், ஒரு எலெக்ட்ரிக் டெயில் லைட், 2 லூக்காஸ் ஆயில் லைட்கள், 1 லூக்காஸ் ஹாரன், சமீபத்தில் போடப்பட்ட 4 டயர்கள், ரிம்மோடு கூடிய ஸ்டெப்னி ஒன்று. காருக்குரிய இன்னும் இதர எல்லா சாமான்களுடனும் இருக்கின்றன. சைட் கர்ட்டன்சும் சீட் கவர்களும் உண்டு. காலன் 1க்கு 20, 25 மைல் போகிறது. நேரில்வந்து காரை ஓட்டி டிரெயல் பார்த்துக் கொள்ளலாம். வேண்டுவோர் உடனே எழுதவும்.

என். தண்டபாணி பிள்ளை, சோல் புரோப்ரைட்டர்.
என். தண்டபாணி கம்பெனி, 292, சைனா பஜார் மதராஸ்.
(அல்லது)
தென் இந்திய மோட்டார் இஞ்சீனியரிங் ஒர்க்ஸ், மைலாப்பூர், மதராஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

### 135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துகள் இனாம்.

5-வருஷம் உத்தரவாதம்] ராஜூ'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5

இந்தத் தமிழ் எழுத்துகளடங்கியபெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான, விலாசங்கள், முதலியவைகளைத் தாங்களே அடித்துக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம். இந்தப்படத்தில் கண்டபடி அதாவது.—

அ அ அ அ ஆ ஆ ஆ இ இ ஈ ஈ உ உ ஊ ஊ எ எ ஏ ஏ ஐ ஒ ஒ ஓ ஓ



இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும் பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சிராவணம் 1, மை ஊற்றிய ஸெல்ப் இங்கிபாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆகமொத்தம் சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ 5—8—0 மேல்கண்ட தமிழ் ரப்பர்எழுத்துப்பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குடி அரசு' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ எழுத்துக்களும். நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாமாக அனுப்பப்படும். (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ 1—6—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு

(V100) எமது விலாசம்:— அ. ராஜூ பிள்ளை அண்டு பிரதர்,
இந்தியா ரப்பர் எழுத்துத்தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை மதராஸ்.

குளிர்! குளிர்!! குளிர்!!!

### பால கலவா அல்லது கம்பளி குல்லா.



குளிர், பனி காலங்களில் சரீரத்தைப் பாதுகாப்பதற்காக இந்த கம்பளி குல்லா ஒவ்வொருவரிடத்திலும் ஒன்று இருத்தல்வேண்டும். அசல் கம்பளி, சிகப்பு, கிரே, பிரௌன், வெள்ளை முதலிய பலகலர்களில் கிடைக்கும்.

நெ. 1 குல்லா பெரியது ரூ. 1—8—0
நெ. 2 குல்லா ரூ. 1—0—0

உடனே எழுதுங்கள்.

கனடியன் வாட்சு பீபிள், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## சுயமரியாதை அகராதி.

திரு. K. S. நாராயணன் எழுதுவது.

காலப்போக்கை அநுசரித்து ஒரு பதத்துக்கு ஒருகாலத்தில் ஒரு பொருளும் மற்றொரு காலத்தில் வேறொரு பொருளும் கொள்ள வேண்டியிருக்கிறது. உதாரணமாக பழைய காலத்தில் "காலை ஆகாரம்" என்பது பழைய சாதத்தையும், ஊறுகாயையும் குறிப்பிட்டது. ஆனால் தற்காலத்திலோ காபி, டீயை குறிக்கிறது இதை குழந்தைகள் முதல்கொண்டு பெரியோர்கள், பெண்கள், ஆண்கள், அறிவாளிகள், வைதீகப்புலிகள் வரை அறிவார்கள். அதை காரியத்திலும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பழைய காலத்து "காலை ஆகாரம்" என்பது சூடில்லாதது குளிர்ந்தது என்று பொருள்பட ஒருவர் பேசுவாரானால் சூடான காபி டீயை காலை ஆகாரமாக உபயோகப் படுத்துகிற தற்கால ஆசாமிஒருவருக்கு எப்படி விஷயம் விளங்காதோ, அதேபோல் சுயமரியாதை உலகத்தில் சுயமரியாதை உள்ளவர்கள் மதத்தின் பேரால் உள்ள மூட நம்பிக்கைகளை விட்டொழிப்பதற்கு சில வார்த்தைகளுக்கு தற்கால பொருளைக் கொண்டாலன்றி, சாத்தியப்படுகிறதில்லை. ஆனதால் எனது "சுயமரியாதை அகராதி"யில் சில பழைய வார்த்தைகளுக்கு தற்கால பொருள் குறிக்கப்பட்டிருக்கிறது.

1 அக்ரகாரம்—பேய்கள் வாழும் இடம் (அக்கிரமம் மிகுந்த இடம்)
2 கோவில்—விபசாரச்சத்திரம்
3 அர்ச்சகன்—கடவுளை விற்பவன்
4 குருக்கள்—மோசலோக வழிகாட்டி மார்
5 மடாதிபதி—ரகசிய கள்ளக் கூட்டத் தலைவன்
6 சாமியார்—கஞ்சாசகசக்கும் அதிகாரி
7 மடங்கள்—காலிகள் கூடுகிற இடம்
8 உற்சவம்—கண்ணடிக்கின்ற கான்பரன்ஸ்
9 ஆசிரமம்—சதியாலோசனைச் சங்கம்
10 லோககுரு—பகல் கொள்ளைக்காரன்
11 வக்கீல்—சேலைகட்டாத தேவடியாள்
12 காங்கிரஸ்—கையாலாகாத விபசார கிழங்கள் வாய் வேதாந்தம் பேசுமிடம்
13 மோட்சலோகம்—லண்டன்மாநகரம்
14 சுயராஜ்ய கட்சி—பார்ப்பனீயத்தை பெருக்கும்சபை
15 காலேஜ்—அடிமைகள் உற்பத்தி செய்யுமிடம்
17 வேதம்—துவேஷ களஞ்சியம்
18 புராணம்—பொய்க்கடல்.
19 சாஸ்திரம்—ஒன்றுக்கும் உதவாத குப்பைதொட்டி
20 காலை ஆகாரம்—காபி, டீ-

**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.**

## திரு. கிஞ்சப்ப கவுண்டருக்கு ஓர் அநுதாபக்கூட்டம்

காரமடை ஒக்கிலிக மாணவர் விடுதியில் 2—11—28 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஒக்கிலிக மஹாஜன சங்கத்தாரால் ஒரு கூட்டம் நிகழ்ந்தது.

அதுகாலை ஸ்ரீலஸ்ரீ சாது சச்சிதானந்த சுவாமிகள் தலைமை வகித்து முன்னுரையாக காலஞ்சென்ற திரு. கிஞ்சப்பகவுண்டர் அவர்களுடைய உத்தம உதார தர்மகுணங்களைப்பற்றியும் அன்னவர் செய்துவைத்த தருமஸ்தாபனங்களைப்பற்றியும் அப்பெரியார் அகாலமாக நம்மைவிட்டு பிரிந்ததற்கு துக்கமெய்துவதாகவும் பேசிமுடிந்தவுடன் அன்னவரது ஒருசிபடம் எழுந்தருளினர். திருவாளர் கே. ரங்கேகவுண்டர் அக்கனவரின் வழியைப் பின்பற்றி நடக்கவும் தருமஸ்தாபனங்களை விருத்திசெய்யவும் வேண்டுமென அதிகரித்தோர் பேசினர்.

இக்கூட்டத்தில் அநுதாபச்செய்தியை அவர்களின் பந்துக்களுக்கும் பந்துக்களுக்கும் அன்னவர் மகனுக்கும் தெரிவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் மௌனமாய் கலைந்தது.

வி. எம். ரஞ்சப்பன்

## காலஞ்சென்றார்!

கும்பகோணம் ஸ்ரீமான் எ. டி. வெங்கடநாராயண பிள்ளை 2-11-28 தேதி இரவு திடீரென்றேற்பட்ட மார்வலி உபாதையால் இவ்வுலகை நீத்தார் என்பதைக்கேட்டு வருந்துகிறோம். இவர் முனிசிபல்கவுன்சிலில் 24 ஆண்டுகள் கவுன்சிலர் ஸ்தானத்தை தொடர்ச்சியாய வகித்தும் வைஸ்சேர்மன் பதவியை ஒரு முறை பார்த்தும் டிஸ்டிரிக்ட் போர்டு தாலூகா போர்டுகளில் பல முறை ஸ்தானத்தை வகித்தும், தேவஸ்தானக்கமிட்டி மெம்பாகவும் இருந்து தம் மனச்சாட்சிப்படி நடந்து வந்த பெரியாராவர். வயது 57 நடக்கிறது. இவருக்கு ஓர் புத்திரரும் 3 புத்திரர்களுமுளர். இவர் மாணத்தை முன்னிட்டு ஹைஸ்கூல் இன்று மூடப்பட்டது. நமது அநுதாபத்தையும் அவர் குடும்பத்தினருக்கு அறிவிக்கிறோம்.

### பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

பந்தலகுடி வேலாயுதபுரம்- இன்று எனது தகப்பனுருக்கு நடத்தவேண்டிய திதியை பார்ப்பனர்களை முற்றும் நீக்கி ஏழைகளுக்கும் சுற்றத்தார்களுக்கும் போஜனம் படைத்து முடித்தேன். பாலசுப்ரமண்யம்-




நீங்கள் அநேக மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி தீராமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் பழநி, சி. எம். சாமி,

**குருதாம்பர பஸ்பம்.**

சாப்பிடுங்கள்.

**சகல வியாதிகளுக்கும் கைகண்டது.**

திமிர் குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், தடிப்புகள், மாறிவிட்டது. ஆறாத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல்முதலிய எல்லாவியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 25 ஏழைகளுக்குப் பாதிவிலை.

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி :—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணமாகி போற்றுவதை கவனியுங்கள்,

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேக வியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூரண குணமானான். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூரண குணமானான்- ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர்மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27,

**தாதுபுஷ்டிக்கு, பழனி, சி. எம். தங்கபஸ்பம் சாப்பிடுங்கள்.**

வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்கிறது. தாதுவிர்த்தியை கொடுத்து புத்திர சந்தானத்தை உண்டு பண்ணும். பத்தியமில்லை, 24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

**சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,**

**C. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

*மானம் வந்தாலும் சொன்னது தவறார்- அற்ப லாபத்திற்காக பிறரை வஞ்சித்தல்இகழ்ச்சி என்று கொள்ளுவார்- போரில் மானங்கெட்ட செய்கை செய்வதிலும் தோல்வியே மேலென்று கொள்வார்- அப்படிப்பட்டவீரர்களின் மரபில் தோன்றிய நம் பண்டிதர்கள் மனித ஜாதியை அவமதித்து, குறிப்பிட்ட தங்கள் மதம், அல்லது நிறம், அல்லது தங்கள் ஜாதியைச் சேராதவர்களை இகழ்ந்து கொடுமை செய்து சூத்திரன் யென்னும் பட்டமும் கட்டி வைத்திருக்கும் பாப்பார்களுடைய சாஸ்திரக் குறிப்பறியாமல் அவர்கள் வாய்வலியைக்கண்டஞ்சி தங் பலக்குறைவால் மதிசோர்ந்து குருட்டுத்தனமாகத் தன் பத்தியைச் செலுத்தும் சிதம்பரத்துப்பண்டிதர் எந்த அப்பனுக்குப் பிறந்தால்தானென்ன ?*

*துருவன் கதையைப்போன்று இன்னும்பல உள. இந்தக்கதைகள் ஸ்மிருதிகளைக் குற்றம் சொல்லாமலிருப்பதற்கு யெழுதப்பட்ட தந்திரம் சிவன் பிராமணன், விஷ்ணு க்ஷத்திரியன், பிர்மா வைசியன், தேவேந்திரன் சூத்திரன், என்று கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் தேவேந்திரனுக்குப்பிறந்தான் என்றுசூத்திரபீஜமென்பது பாப்பானின் பரிபாஷையின் அர்த்தம். சூத்திரன் என்றுச் சர்மமும் ஒழுக்க ஆசாரமுமில்லாதவன் ஸ்மிருதியை குற்றம் சொல்லிவிட்டால் சூத்திரன் என்கின்ற பெயர் வந்துவிடுமோ என்று பயந்திருப்பதற்கும் அப்பனுக்குப் பிறக்கவில்லை என்கிற அவமானம் வந்துவிடுமோ என்று பயந்திருப்பதற்கும் பார்ப்பானுல் முன்ஜாக்கிரதையால் எழுதப்பட்ட கதை பண்டிதர்கள் படித்தும், கேட்டுமிருக்கலாம். ஊகித்துப்பார்த்து உண்மை தெளிவதற்கு புத்தி சென்றதில்லை. எந்தப் பெரிய பண்டிதரானாலும், சுவாமி வேதாசலமானாலும், பத்திரிகை பண்டிதர் கலியாணசுந்தர முதலியாரானாலும் வக்கீல் வேலையைகூட கவனிக்காமல் சிவபூசைசெய்யும் சுப்பரமணிய பிள்ளை யானாலும் நாயன்மார்களுடைய அகப்பற்றும் புகப்பற்றும் யாருக்குவருமென்று நினைத்துக்கொண்டிருக்கும் பண்டிதர்களானாலும், இன்னும் பலபல அநேக பண்டிதர்களானாலும் எவ்வளவு பெரியபாப்பார்போற்றும் ராஜீயவாதியானாலும், பெரியபண்ணைமுதலியாரானாலும்,மிராஸ்தார்பிள்ளையானாலும்,விஜயராகவாச்சாரியானாலும்,நாட்டுக்குடைய நாடாரானாலும், நாற்பதுலக்ஷம் நம் கல்விக்குக் கொடுத்த நாட்டுக்கோட்டை பிரபுக்களானாலும், பசுவளர்த்து பண்ணைகளுக்கெல்லாம் கொடுத்து உலக பாக்கியத்தை வளர்க்கும் பழயகோட்டைப் பட்டக்காரரானாலும் நூற்றெட்டு பசு பழனிக்கும் பாபிஷேகத்தில் தானம்கொடுத்த நல்லதம்பிச்சக்கரைமன்றாடியாரானாலும் சாஸ்வதிபூசையைசங்கராச்சாரியால நடத்தின அம்மயனயக்கனூர் அதிபதி யானாலும், இனிசங்கராருக்குபடி அளக்கப் போகும் கோயமுத்தூர் உடுமலப்பேட்டை தாராபுரத்து தனிகர்களானாலும், பார்ப்பானைப்போலவே தாங்களும் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு ஜனசமூகங்களை அவமானப் படுத்திக் கொண்டிருக்கும் சைவர்களே யானாலும் இதில் விடப்பட்ட தமிழ்தேசத்து எந்தப் பெரியவனானாலும் பார்ப்பார்கள் எழுதிவைத்திருக்கும் எல்லா ஸ்மிருதியின்படி தாசி மக்கள்தானே ஆகின்றோம். ஆசாரம்ஒழுக்கம் இல்லாதவர்கள்தானே ஆகின்றோம், இது பார்ப்பார்களைத் திட்டுவதற்காகஎன்று எழுதுவதன்று. புஸ்தகத்தில் நடவடிக்கையில் அநுபோகத்திலிருப்பவை. அநேகதரம் எடுத்துக்காட்டப்பட்டவை. இவ்வளவு நாளாக 'குடிஅரசு'போட்டுவரும்சத்தத்தால்திரு எஸ் சீனிவாச அய்யங்கார் சூத்திரனென்று சொல்லப்படாதென்று அறிக்கைபோட்டார். அதை புஸ்தகத்திலிருந்தும் சட்டத்திலிருந்தும் எடுத்துவிட வேண்டுமென்று நாங்கள் சொல்லுவதால் பண்டிதர்கள் சோபிக்கிறார்கள். பண்டிதர்கள் பெரிய புராணத்திலும் ராமாயணத்திலும் ஆராய்ச்சி செய்வதைவிட்டு இதில் கிறிதுகவனம் செலுத்தக் கேட்டுக்கொள்ளுகிறோம்.*

---

## காலஞ்சென்றார்.

கோம்பை பிரமுகர்களில்ஒருவரும், ஸ்ரீதிருமலைராயப்பெருமாள் சுவாமி தேவஸ்தான கமிட்டி யூனியன் போர்டு மெம்பரும், திருவாங்கூர் எலஷிவசாமிகளின் கோம்பை கிளைச்சங்கத்தின் வைஸ்பிரசிடெண்டும், தேனி ஆரிய வைஸ்ய தர்மசத்திரத்தின் தர்மகர்த்தாக்களுள் ஒருவரும், தர்மபள்ளிக்கூட அதிபரும் பொதுஜனநண்பருமான ஸ்ரீமான் வ. ஸ்ரீராமன் செட்டியாரவர்கள் ஒருவாரமாக சுகக்குறைவாக இருந்து 31-10-28 தேதி புதன்கிழமை இராத்திரி 9 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார்- அவ்வவரின் ஜடலம் ஆயிரக்கணக்கான பொதுஜனங்களுக்கிடையே கொண்டுபோய் தகனம் செய்யப்பட்டது. பெரியாரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் காட்டுவதற்கறிகுறியாக அன்று கடைகள் பூராவும் மூடப்பட்டன. மு. அ. மு.

## இராசிபுரம் கோவாபரேடிவ் சொசைட்டி

---

ஷை சொசைட்டியில் ஆண்டுதோறும் நடத்த வேண்டிய டைரக்டர்கள் எலக்ஷனை வாய்தா முடிந்து ஆறுமாதமாகியும் எக்காரணத்தாலோ மகாசபை கூட்டாமலும் எலக்ஷன் நடத்தாமலும் இருப்பதினுல், ஷை சொசைட்டியின் மெம்பர்கள் 27-10-28ல் மகாசபை கூட்டி எலக்ஷன்நடத்த வேண்டுமென்று 24 பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று 22-10-28ல் பிரசிடெண்டு அவர்களுக்கு எழுதியதற்குப் பதிலும் எழுதவில்லை. மகாசபையும் கூட்டவில்லை. ஆகையால் 27-10-28ல் மாலை 2மணிக்கு திரு. ச. ப. முத்தையப் செட்டியார் சாரப்கடையில் ஷை சொசைட்டியின் மெம்பர்கள் 31 பேர் கூடி திரு. எம். கெ. வெங்கடபதி செட்டியார் தலைமையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்தார்கள்.

### தீர்மானம்.

22-10-28ல் எழுதிக்கொண்ட விண்ணப்பத்திற்கு பதிலாவது மகாசபையாவது கூட்டாததினுல் கனம் டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கும் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கும் சேலம் ஜில்லா அர்பன் பாங்கு பிரசிடெண்டு அவர்களுக்கும் நாமக்கல் தெங்கு ஆடிட் யூனியன் பிரசிடெண்டு அவர்களுக்கும் தெரியப்படுத்தி கனம் டிப்டி ரிஜிஸ்ட்ராரையாவது சீனியர் இன்ஸ்பெக்டரையாவது அனுப்பச் செய்து கணக்குகளை பரிசோதிக்கச் செய்து எலக்ஷனை உடனே நடத்திக் கொடுக்க வேண்டுமாக கனம் டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்களை கேட்டுக்கொள்வதாக ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

---


எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.




இதிர்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும்.5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

# அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலக டிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

( V. 120 ) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,

போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன்கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன, உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணோ பெண்ணோ என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்குநாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0-0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

## வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.

## "ரிவோல்ட்"

"குடிஅரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ. 4—0—0 |
| மாணவர்களுக்கு | ரூ. 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | ரூ. 5—0—0 |

ஆசிரியர்கள்:—

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

S. இராமநாதன், M. A., B. L.,

விலாசம்:—

மானேஜர், "ரிவோல்ட்,"

ஈரோடு.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



## 'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

| | |
|---|---|
| இதன் வருட சந்தா | ரூ 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | ரூ 4—0—0 |

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.



## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நிறுசகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.

திரௌபதை அம்மன் கோவில் வீதி,

புதுச்சேரி.



## 64 — பக்கம் — 64

# ஆனந்தவிகடன்

இதுசமயம் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு,

| | |
|---|---|
| தபால் கூலியுள்பட | 1...0...0 |
| வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ | 1...4...0 |

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்", டெலிபோன் நெ. 3311.



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரைகளை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை லேபிளில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.



கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.